Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா

ஜீவாகாரம்
அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1617) T.P.-2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 09 (04.11.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:35

# அமைச்சர்களை புலித்தேவன் சந்தித்ததாக வெளியான செய்திகளுக்கு புலிகள் மறுப்பு!

## ஊடகங்களில் விசமத்தனமான பிரசாரம் எனக் கண்டனம்!

(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் நான்கு மூத்த அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் வவுனியாவுக்குச் சென்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலக செயலர் புலித்தேவனுடனும் ஏனைய பிரதிநிதிகளுடனும் இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாக கலந்துரையாடியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்று 'நமது ஈழநாடு' பத்திரிகை தவிர்ந்த - ஏனைய ஊடகங்களில் வெளியான தகவல்களைக் கண்டித்து, வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இடைக்கால நிர்வாக வரைபு கடந்த 31 ஆம் திகதியன்று கிளிநொச்சியில் வைத்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனால் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட நிகழ்வின்போது, எதிர்காலத்தில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுவார்த்தையில் புலிகள் பங்குபற்றத் தயாராக இருப்பதாகவும் அதற்கான ஒழுங்குகளை நோர்வே அனுசரணையாளர்களே மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டிருந்தார்.

இலங்கைத் தீவில் ஓர் நிரந்தரமான அமைதித் தீர்வை ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பாடுபட்டுக் கொண்டிருக்கும் நோர்வே அரசின் முயற்சிகளில் விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் பூரண திருப்தியும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் முற்றிலும் பொய்யான செய்திகள், சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக வெளிவருவது தமிழ் மக்களையும் நோர்வே அனுசரணையாளர்களையும் சர்வதேச சமூகத்தையும் முற்றிலும் குழப்பத்தில் ஆழ்த்திவிடுவதற்கே துணைபுரியும்.

எதிர்காலத்தில் இடம்பெறும் எந்தவிதமான சமாதானப் பேச்சுவார்த்தைகளும் நோர்வே அனுசரணையாளர்களின் பூரண ஆதரவோடும் ஒத்துழைப்போடும் இடம்பெறவேண்டுமென்பதே புலிகளினதும் தமிழ்மக்களினதும் முழுமையான விருப்பமும், நிலைப்பாடும்.

இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள், தீர்வு முயற்சிகள் எதுவுமே அனுசரணையாளர்களுடனானதாகவும், அதிகாரபூர்வமானதாகவும் வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் இருக்குமென்பதை தெளிவாக முன்வைக்கிறோம். (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் யோசனையை அமெரிக்கா வரவேற்பு; சமாதானத்தை ஏற்படுத்தும் என்றும் நம்பிக்கை!

## கொழும்பிலுள்ள தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை எழுத்து மூலமாகச் சமர்ப்பித்திருப்பது - நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, இலங்கையில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

**இது குறித்து அமெரிக்கத் தூதரகம் நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -**

விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் குறித்த திட்ட யோசனைகளைக் கவனத்தில் எடுத்து, இரு தரப்பினரும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகமொன்றை வழங்குவதற்காக அரசாங்கம் முன்வைத்த யோசனைகளுக்கு, விடுதலைப் புலிகள் மாற்றுயோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

அவர்களுடைய திட்டயோசனைகளை காத்திரமான முறையில் இரு தரப்பும் விட்டுக்கொடுப்புடன் ஆராய்ந்து, பேச்சுக்களை நடாத்தவேண்டும். இவ்வாறான சமாதானப் பேச்சுக்களின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

ஒஸ்லோவிலும், ரோக்கியோவிலும் முன்வைக்கப்பட்ட அடிப்படை விடயங்கள் மற்றும் அறிக்கைகளுக்கமைய நிரந்தர சமாதானத்திற்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர்ப் பகுதியில் டெங்குக் காய்ச்சல் பரவுகிறது; 12 பேர் இனங்காணப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் டெங்குக் காய்ச்சல் பரவிவருகின்றது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட 12 பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனர் என, யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.மரியதாஸன் தெரிவித்தார்.

இந்த நோயினால் நல்லூர் பகுதியைச் சேர்ந்த ஐவரும் குருநகரைச் சேர்ந்த நால்வரும், பாஷையூரைச் சேர்ந்த இருவரும், யாழ்.மாந (10 ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு பரவுவதை தடுக்க விசேட குழு அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில், டெங்குத் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என, யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.மரியதாசன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில், அண்மை நாட்களில் டெங்குக் காய்ச்சல் பரவிவருவது கண்டறியப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையின்போது தென்மராட்சிப் பிரதேசத்தில் காணாமற்போன 24 பேர் தொடர்பாக உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல்!

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது, யாழ்.மாவட்டத்தில் காணாமற்போன 24 இளைஞர், யுவதிகள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, காணாமற்போனோரின் - பெற்றோர், குடும்ப அங்கத்தவர்கள் அமைப்பின் செயலாளர் சிதம்பர மோகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது - தென்மராட்சிப் பகுதியில் காணாமற்போன 24 பேர் சமபந்தமான வழக்கு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை இம்மாதம் 20 ஆம், 25 ஆம், 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் மனித உரிமைக்கான விசேட சட்டவல்லுநர் சந்திர பாலகுமாரகே தலைமையிலான குழுவினர் இவ்வழக்கு விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளனர்.

இந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அ. விநாயகமூர்த்தி காணாமற்போனோர் சார்பில் ஆஜராகவுள்ளார்.

இராணுவ நடவடிக்கையால் காணாமற்போன அனைவரது வழக்குகளும் இவ்வாறு உயர்நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லப்படவுள்ளது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பு அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில்!

### திறைசேரி வட்டாரங்களில் தகவல்

(கொழும்பு)

அரசாங்கம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் - அரச ஊழியர்களுக்கான சம்பளம் ஆயிரத்திஐந்நூறு ரூபா முதல் ஆயிரத்திஎழுநூறு ரூபா வரை அதிகரிப்படலாமென திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்பொழுது வழங்கப்படும் சம்பளம், விசேட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக இந்தச் சம்பள உயர்வு இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

3 இலட்சத்து 85 ஆயிரம் அரசாங்கம் ஊழியர்களில் 65 வீதம் முதல் 75வீதம் வரையானவர்களுக்கு இந்தச் சம்பள உயர்வு கிடைக்குமென்றும், ஓய்வூதியர்களுக்கு இருந்துவரும் ஓய்வூதிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## நிமோனியாவால் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வயோதிபர், யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

கடந்த சனிக்கிழமை காய்ச்சல் காரணமாக, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com. (சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# சஞ்சீவன் ஞாபகார்த்த மென்பந்து சுற்றுப் போட்டியில் யாழ். இந்து அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது!

படுகொலை செய்யப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் - சோம சுந்தரம் சஞ்சீவன் ஞாபகார்த்தமாக, தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி, நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதின.

இந்தப்போட்டியின் ஆரம்ப நிகழ்வுகளின்போது - பொதுச்சுடரினை யாழ்.இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் ந.மகேஸ்வரன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபர் கி.நடராஜா, சர்வதேச மாணவர் பேரவையைச் சேர்ந்த எஸ். கண்ணன், யாழ்.வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் கே.அருணகிரி, யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத்தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். இறுதிப்போட்டியில் மோதிய இரு கல்லூரிகளினதும் அதிபர்கள் தமது கல்லூரிக்கொடிகளை ஏற்றிவைத்தனர்.

மாணவன் சஞ்சீவனின் உருவப் படத்திற்கு, அவரது தந்தையார் சோமசுந்தரம் ஈகைச்சுடரினை ஏற்றி மலரஞ்சலி செலுத்தினார். சஞ்சீவனின் உருவப்படத்திற்கு, தமிழீழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த எழிலன்பன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதன்பின்னர் - இரு அணி வீரர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்கள் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற, யாழ்.இந்து அணித்தலைவர் ரி.பகீரதன் முதலில் தனது அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

ஆட்டத்தைத் தொடங்கிய இந்துக் கல்லூரி அணி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அணியினரின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறினர். ஒரு கட்டத்தில் 30 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுக்களை இழந்து, யாழ்.இந்து அணி இக்கட்டான நிலையில் இருந்தது. அதன்பின் - களத்திற்கு வந்த திவாகரன் நிதானமாக விளையாடி 27 ஓட்டங்களைப் பெற்றதுடன், அணியின எண்ணிக்கையையும் 61 ஆக உயர்த்தினார். 15.3 ஓவர்கள் முடிவில யாழ்.இந்துக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 67 - ஓட்டங்களைப் பெற்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அணியின் சார்பில், முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும், சுஜீவன், கஜீவன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், ஜீவகன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி, முதலாவது ஓட்டத்திலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது. இறுதியில் 17.2 ஓவர்களில், சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 48 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இதில், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எடுத்த ஓட்ட எண்ணிக்கை 23. ஆனால் யாழ். இந்து உதிரியாகக் கொடுத்த எண்ணிக்கை 25 ஆகும்.

யாழ்.இந்து அணி 13 ஓட்டங்களால், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை வென்று, சஞ்சீவன் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்தப்போட்டிக்கு நடுவர்களாக ரி.றொபேசனும், எஸ்.சிவசங்கரும் கடமையாற்றினர்.









நேற்று சஞ்சீவன் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியில்-தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றுவதை முதற்படத்திலும், சஞ்சீவனின் உருவப்படத்திற்கு அவரது தந்தை மலர்மாலை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும், இரு அணிகளும் மோதுவரை மூன்றாவது படத்திலும், இந்த நிகழ்வைப் பார்வையிட வந்தவர்களை நான்காவது படத்திலும் காணலாம்.

## சைவபரிபாலனசபை சைவநெறித் தேர்வு

சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் சைவநெறித்தேர்வு- எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, சிலாபம், ஆகிய மாவட்டங்களில் 422 தேர்வு நிலையங்களில் 82000 மாணவர்கள் இந்தத் தேர்வுக்குத் தோற்றவுள்ளனர்.


நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், பூமிகா நடிக்க பத்ரி

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

XXX

(சி-1752)

ராஜா யாழ்ப்பாணம்.

பிதாமகன்

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1751)


## காணி எல்லைப் பிரச்சினை

உதயனில் கடந்த சில தினங்கள் வெளியாகிய றக்கா ஒழுங்கை 31/2 பரப்புக் காணி விற்பனை, விளம்பர இலக்கம் சி/31019 கொண்ட காணிக்கும் பக்கத்தேயுள்ள எனது காணிக்கும் எல்லைப் பிரச்சினை உண்டு என்பதைத் தெரியப்படுத்துகின்றேன்.

பி.ஸ்ரனிஸ்லாஸ் (மேக்கப்)
1/1 றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம் (522)

## சிறுவிளம்பரம்
## காணவில்லை

நல்லையா மகேஸ்வரன் 561932719V என்பவருடைய தேசிய அடையாள அட்டை கடந்த வெள்ளிக்கிழமை முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் வரும்வழியில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் இல 267 நாவலர் வீதியில் அமைந்துள்ள நமது ஈழநாடு பணிமனையில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-1768)

## வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (மட்டு)

### திருத்தவேலை கூலிக்கான கேள்வி விண்ணப்பம்

எமது அலுவலக மாடிக்கட்டிடம் பின்வரும் வேலைகள் மூலம் திருத்தம் செய்யப்படவேண்டியுள்ளது. இதன் கூலிக்கான கேள்வி விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்று தெளிவாகப் பூரணப்படுத்தி எதிர்வரும் 14.11.2003 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'பொதுமுகாமையாளர், வட மாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம' என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் 'திருத்தவேலைக் கூலிக்கான கேள்வி விண்ணப்பம்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். அலுவலகநேரத்தில் செய்யவேண்டியுள்ள வேலைகளைப் பார்வையிடலாம்.

*வேலைகள்*

1. மேசன்வேலை
2. மரவேலை
3. மின்இணைப்பு
4. வர்ணப் பூச்சு

*52, சோமசுந்தரம் லேன்,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (சி-1766)

பொது முகாமையாளர்,
வட மாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்.

## தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு, கடன் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 2002.12.31 ஆம் திகதிய நிதியாண்டின் கணக்காய்வு நடைபெறுவதால் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் 05.11.2003 ஆம் திகதி தொடக்கம் 17.11.2003 ஆம் திகதிக்குள் தங்கள் கணக்கின் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் பேரேட்டு மீதிகள் சரியென ஏற்றுக்கொள்ளப்படும்.

(சி-1767) பொதுமுகாமையாளர்

## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதிக்குக் கீழ்வரும் பணிநிலைக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகினறது. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 10.11.2003 ஆம் நாளுக்கு முன்னதாக, எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

**கல்வித் தகைமை:-** க.பொ.த (உ/த) அல்லது க.பொ.த (சா/த) உடன், ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-** பொறுப்பாளர், மனிதவள மேம்பாட்டுப்பகுதி, வருவாய்ப்பகுதிச் செயலகம், கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:-** 11.11.2003. காலை 10.00 மணி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-** வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

**குறிப்பு:** நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி/1758)

# அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான முயற்சியில் பொ.ஐ.மு. தலைமையில் எதிர்க்கட்சிகள்?

## அரசியல் வட்டாரங்கள் கருத்து

வடக்கு - கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த நகல் திட்டத்தை, விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்திடம் கையளித்திருக்கும் நிலையில், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான அந்தரங்கமான முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபடக்கூடுமென்ற அச்சம் அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கிறது.

வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச் சட்ட இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின்போது, அரசாங்கத்தைத் தோற்கடிக்கும் முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் இறங்கலாமெனப் பரவலாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பதவி நீக்கிவிட்டுப் பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமையிலான புதிய அரசை அமைக்கும் முயற்சியில் இலங்கை ஜனாதிபதி ஈடுபடலாம் என, பரவலாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பதவி நீக்கிவிட்டு, பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமையிலான புதிய அரசை அமைப்பது சாத்தியமில்லை எனவும் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பதவிநீக்கம் செய்தால், குறுகிய காலத்திற்குள் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலுக்குச் செல்வது மட்டுமே ஜனாதிபதிக்குள்ள ஒரே தேர்வாக இருக்க முடியுமென அரசியலமைப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# விடுதலைப்புலிகளின் திட்ட வரைபில் ஜனநாயக மறுப்புகள் உள்ளதாம்!

## டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தில், பல ஜனநாயக மறுப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறு ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு நேற்றுமுன்தினம் இரவு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவிததார். அவர் மேலும் தெரிவிக்கையில்- புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய தீர்வுயோசனை, தமிழ் மக்களை மேலும் துன்புறுத்துவதற்கே வழிவகுத்துள்ளது.

சட்டியில் இருந்த தமிழ் மக்கள் அடுப்பிற்குள்போன கதையாகவே இந்தத் தீர்வுத்திட்டம் உள்ளது. ஜனநாயக மறுப்புக்கள் நிறையவே இந்தத் திட்டத்தில் வெளிப்படையாகக் காணப்படுகிறது.

குறிப்பாக நீதிமன்றம், பொலிஸ் மற்றும் சட்ட ஒழுங்குகளைப் புலிகளிடம் வழங்கிவிட்டு, மக்கள் - முறைப்பாடுகள்கூடச் செய்யமுடியாத வகையில் துன்புறுத்தப்படப் போகிறார்கள்.

வரி அறவிடுதல், ஆட்களைச் சேர்த்தல் முதலானவற்றிலேயே புலிகள் அக்கறை செலுத்துவது தெரிந்ததே. புலிகள் இத்தகைய நடவடிக்கைகளை விஸ்தரிக்க எடுக்கும் ஓர் நடவடிக்கையாகவே - இந்தத் திட்ட வரைபு உருவாக்கப்பட்டுள்ளது. பன்முகப்பட்ட சமூகம் வாழும் இலங்கையில், இத்தகைய தீர்வுத் திட்டம் பொருத்தமற்றது எனவும் தெரிவித்தார்.

# புலிகளின் திட்ட வரைபை புளொட்டும் வரவேற்கிறது

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகத்திட்டவரைபினை - தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் வரவேற்றுள்ளதாக, அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் அபிலாஷைகள் இந்தத்திட்டத்தில் முழுமையாக உள்ளடக்கப்பட்டிருப்பதால், தாம் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

ஆனாலும், விடுதலைப்புலிகளைத்தாம் ஒருபோதும் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளவில்லையெனவும், இருந்தும் புலிகள் தமது கட்சியைவிட சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதால் அதிக உரிமைகளை தமிழருக்காக வென்றெடுக்கமுடியும் என்பதனையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் போராட்டத்திற்கு, தாம் எப்போதும் துணைநிற்பதாகவும், ஒற்றுமையற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பில் இணையவேணடுமென்பது மடமை என தான் தற்சமயம் கருதுவதாவும் சித்தார்த்தன் தெரிவித்தார். (01)

# 29 வது தேசிய விளையாட்டு விழாவில் தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிப்பு!

குருநாகல் வெலகெதற சர்வ தேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 29 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் - தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விளையாட்டு விழாவில் வர்ணனைகள், அறிவித்தல்கள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களிலும் தமிழ்மொழிக்கு இடமில்லை.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளிலிருந்து பெருமளவு வீரர்கள் கலந்துகொண்ட இந்தப்போட்டியில் - தமிழ்மொழி முற்றாக புறக்கணிக்கப்பட்டமையால், சிங்கள மொழி தெரியாதவர்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு உட்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற விளையாட்டு விழாவின்போது - தமிழ்மொழிக்கு உரிய இடம்வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த வருட விழாவில் தமிழ்மொழி முற்றாக புறக்கணிக்கப்பட்டமை - தற்போதைய சமாதான சூழலுக்கு ஒவ்வாத செயலெனப் பலரும் விசனம் தெரிவித்தனர். (01)

### புதிதாக காவலரண் அமைப்பு

இராணுவப் பொலிஸாரின் புதிய காவல்நிலையம் ஒன்று பலாலி வீதி ஆலடிச்சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அதிகரித்துள்ள இராணுவ வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் காவலரண் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (111)

# புலிகள் சமர்ப்பித்த திட்ட வரைபு தமிழீழத்தை ஏற்படுத்தும் முயற்சி

## ஜே.வி.பி இப்படிக் கூறுகிறது

விடுதலைப் புலிகள் அரசிடம் சமர்ப்பித்துள்ள திட்ட வரைபு தமிழீழத்தை அமைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சியாகும்.

இவ்வாறு, நேற்றுமுன்தினம் கொழும்பில் மக்கள் விடுதலை முன்னணியினர் 'ஊடக தெளிவு' மாநாட்டை நடத்திய போது தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய கட்சியின் செயலாளர் - ரில்வின் சில்வா, புலிகளின் திட்டவரைபில் ஈழம் என்ற அரசுக்கான தெளிவான கொள்கைகளை அவர்கள் முன்வைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

புலிகளின் இந்தத் திட்டவரைபை ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணங்கியதன் மூலம், அரசாங்கம் புலிகளுக்கு அடிபணிந்து போயுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவில் அமைந்துள்ள மாநில சுயாட்சிகளுக்கு மேலதிகமாக, விடுதலைப் புலிகளுக்கு அதிகாரம் வழங்க முயன்றுள்ளவகையில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அண்மைய இந்திய விஜயத்தையும்கூட மீறியுள்ளார்.

இதேவேளை, புலிகளின் இடைக்கால வரைபை நாடு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற வகையில், அரசாங்கம் மக்கள் மத்தியில் பிரசாரங்களை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாகவும் - ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (01)

# விடுதலைப்புலிகளின் திட்ட வரைபை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால திட்டவரைபு தொடர்பான பிரேரணைகளை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

இந்த அதிகாரப்பகிர்வு குறித்த அவர்களின் முயற்சி, இலங்கையின் நிரந்தர சமாதான முன்னெடுப்பில் மிக முக்கியமான நடவடிக்கையென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தவிர அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை - மீண்டும் ஆரம்பிக்க புலிகளின் இந்த இடைக்காலத் திட்ட வரைபு வழிவகுக்கும் எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரசிற்கும் புலிகளுக்குமிடையே இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து நோரவேயின் பங்களிப்பு மீளப்பெறும் பட்சத்தில், சமாதான நடவடிக்கைகளில் பாரிய பின்விளைவுகள் ஏற்படக்கூடுமென அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (01)

# அதிகாரப் பரவலாக்கலின் மூலமே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு

## ஜனாதிபதி கூறுகிறார்

நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், தீர்வு காணப்படவேண்டுமானால் அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு நேற்று பத்தரமுல்லவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தமிழீழத்தை கைவிடுவதாகக்கூறி, அதற்கான முன்னெடுப்பை மேற்கொள்வதோ, அல்லது அது தொடர்பாக அரசாங்கம் இணங்குவதோ பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதில்லை. எனவே, இரண்டு தரப்பும் உண்மையாக செயற்படவேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார். (01)

### இலங்கை இராணுவ வைத்தியர்கள் ஈராக்கிற்கு

ஈராக்கில் பணியாற்றுவதற்காக, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த வைத்தியர்களையும், பொறியியலாளர்களையம் அரசாங்கம் அனுபபவுள்ளது. அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்றே, இலங்கை அரசு ஈராக்கிற்கு வைத்தியர்கள் மற்றும் பொறியியலாளர்களை அங்கு அனுப்பி வைக்கவுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில், வொஷிங்ரனலுள்ள வெள்ளை மாளிகையில் நாளை அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சந்தித்துப் பேசும் போது, இந்த உதவி தொடர்பான உத்தரவாதத்தை வழங்குவார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளை நடைமுறைப்படுத்த மூன்றில்இரண்டு பெரும்பான்மை தேவை

## அனுரா பண்டாரநாயக்க கூறுகின்றார்

(கொழும்பு)

புலிகளின் இடைக்காலநிர்வாக யோசனைகளை நடைமுறைப்படுத்துவதாயின், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்படுதல் வேண்டும்.

இவ்வாறு, நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலஙகா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவருமான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டவரைபு குறித்து அவர் கருத்துத் தெரிவித்தபோதே, இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகள், அரசியல் சாசனத்திற்குப் புறம்பானதாகவே உள்ளது. இது எனது தனிப்பட்ட கருத்தாகும். ஒட்டு மொத்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கருத்தல்ல.

ஐந்து வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தவென - புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டவரைபு நடைமுறைக்குப் பொருந்தாதது. சட்ட விரோதமானது.

இதனை நடைமுறைப்படுத்துவதாயின், சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் உண்மை நிலைதனை அறியவேண்டும். நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருத்தல் வேண்டும் எனவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)





மகளிர் படையணியின் அக்கினிப்பறவைகள் விவரணச் சித்திரம் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சியில் வெளியிட்டுவைக்கப்பட்டபோது, திருமதி பொன். தியாகம் சுடரேற்றுவதை மேற்படத்திலும், இந்த விவரணச் சித்திரத்தில் பங்கு கொண்ட கலைஞர்களுக்கு அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதை அடுத்த படத்திலும் காணலாம்.

## குழாய்நீர் மக்கள் பாவனைக்கு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பகுதியில் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர், தற்போது மக்கள் பாவனைக்கு உரியதாக மாறிவருகின்றது.

கடந்த பல மாதங்களாக நிலவிய கடும் வரட்சிகாரணமாக, குடிநீர் கடும் உவர்ப்புத்தன்மையாகி, பாவனைக்கு உதவாதநிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது அடிக்கடி பெய்யும் பருவமழைகாரணமாக, குடிநீரின் உவர்த்தன்மை மாறி, பாவனைக்கு உகந்ததாகிவருகின்றது. (113)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(புன்னாலைக்கட்டுவன்)

தீவகக்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில், கடமையாற்றும் ஆசிரியர்களில் - வகுப்பறைக் கற்பித்தலின் அடிப்படைகள் செயலமர்வில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்களுக்கான, ஆசிரியர் நிலைய தொடருறு கல்விச்செயலமர்வு - இன்று காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை - வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

(83)

## துயிலுமில்லம் சிரமதானம்

இந்த மாதம் நடைபெறவுள்ள மாவீரர்தினத்தை முன்னிட்டு, கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் சிரமதானம்மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதி வர்த்தக ஊழியர்கள், கிராம அங்கத்தவர்கள், ப.நோ.கூ.ச.ஊழியர்கள், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் ஆகியோர் இந்த சிரமதானப்பணியில் ஈடுபட்டுள்ளனர். (111)

### யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில்

# கொழும்பில் பொலிஸாரால் கைதான

# மகனைத் தேடித்தருமாறு தாயார் புகார்

(யாழ்ப்பாணம்)

1995 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தனது மகனை, தேடிக் கண்டு பிடித்துத் தருமாறு கோரி, காணாமல் போனவரின் தாயார் - யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

1995 ஆம் ஆண்டு சவூதி அரேபியாவுக்குச் செல்லும் நோக்கோடு, கொழும்பில் லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த சண்டிலிப்பாயைச் சேர்ந்த நாகமுத்து திருச்செல்வம் (வயது 30) என்பவர் - குற்றப் புலனாய்வுப்பிரிவுப் பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

அப்போதைய சூழலில்- தொடர்பாடல் வசதிகள் குறைவாக இருந்தமையால், யாழ்ப்பணத்திலிருந்து பெற்றோருக்கு மகனின் கைது குறித்த தகவல், ஒரு மாதத்தின் பின்னரே தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவருடன் லொட்ஜில் தங்கியிருந்த மற்றொரு நபரே - குற்றப் புலனாய்வுப்பிரிவு பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்ட செய்தியைப் பெற்றோருக்குத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, கொழும்பு சென்று, இது தொடர்பாக விசாரித்தபோது, பொலிஸார் அத்தகைய ஒருவரைத் தாம் கைதுசெய்யவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள்.

இதனால், மகனைத்தேடும் பணியைக் கைவிட்ட பெற்றோர் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் வன்னிசென்றுள்ளார்கள். தற்போது இங்குவந்த அவர்கள், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்கள். (ப)

## லயனல் பலகல்ல இந்தியா செல்கின்றார்

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல - அடுத்த வாரம் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

கூட்டுப்படைகளின் பிரதம தளபதியாக லெப்.ஜெனரல் பலகல்ல நியமிக்கப்பட்ட பின்னர், அவர் மேற்கொள்ளும், முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

## முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிநெறி ஆரம்பம்

வடக்கு - கிழக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையம், முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான வலுவூட்டல் பயிற்சியொன்றை, இன்று நடாத்தவுள்ளது. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் - பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிநெறியில் 24 பேர் பயிற்றுவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக, இவர்களுக்கு இருபது நாட்கள் தொடர்ந்து வதிவிடப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. வடக்கு - கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்துடன், தமிழர் புனர்வாழ்வு கழகம், போரூட் நிறுவனம் ஆகியனவும் இணைந்து இந்தப் பயிற்சி நெறிக்கு அனுசரணை வழங்கவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில், மூவினங்களையும் சேர்ந்த பயிற்சியாளர்கள், பயிற்றுவிப்பார்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர்களுக்கான செயலமர்வு

தீவகக்கல்வி வலயத்திற்குட்பட்டபாடசாலை அதிபர்களுக்கு - நேரமுகாமைத்துவமும், வினைத்திறன் முகாமைத்துவமும், மனப்பாங்கு விருத்தியும் தொடர்பான இருநாள் செயலமர்வு - இன்றும், நாளையும் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை - வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (83)

## மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காலிழப்பு

மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர், தனது வலதுகாலை இழந்துள்ளார். நேற்றுமுன்தினம் காலை, கூலி வேலைக்கென நுணாவில் பகுதிக்குச் சென்ற மீசாலை வடக்கைச் சேர்ந்த சி.விக்கினேஸ்வரன் (வயது 49) என்பவரே, மிதிவெடியில்சிக்கிப்படுகாயம் அடைந்துள்ளார்.

நுணாவில் பகுதியில் அமைந்துள்ள காணியொன்றை துப்பரவு செய்ய முற்பட்டவேளை, மிதிவெடியில் சிக்கி தனது வலதுகாலை இழந்ததுடன், கடும்காயங்களுக்கு உட்பட்டநிலையில் - யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (121)

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

(வண்ணை)

மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார். மரணமானவரின் சடலம் விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டனர். (111)

## எழுவைதீவு தேவாலயம் புனரமைப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவு புனித தோமையார் தேவாலயம் - பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த 15 வருடங்களின் பின், பாரிய அளவில் கூரைகள் பிரித்துப் புனரமைக்கப்பட்டு வரும் இந்தத் தேவாலயம், இந்தத் தீவிலுள்ள மிகப்பெரிய தேவாலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(83)

## மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் நேற்றுமுதல் புதிய அணியினர் இணைப்பு

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் புதிய அணியொன்று, பயிற்சியை முடித்துக்கொண்டு பணியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

44 பேர்கொண்ட இந்த அணி - டென்மார்க்கின் கண்ணிவெடி அகற்றும் குழுவின் உதவியுடன் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய அணி - பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் முதல் தனது பணியை ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே இந்தப் பகுதியில் வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுடன் இணைந்து சேவையாற்றத் தொடங்கியுள்ளது.

பயிற்சியை முடித்து வெளியேறிய கண்ணிவெடி அகற்றும் பிரிவானது - சர்வதேச தரம் வாய்ந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.(ப)

## சமுர்த்தி சங்க பயனாளிகளுக்கு சுயதொழிலை மேம்படுத்த உதவி

வலி-தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்திச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற பயனாளிகளுக்கு, சுயதொழிலை மேம்படுத்தும் முகமாகப் பலகாரவண்டிலும், அதற்குரிய உபகரணங்களும் வட்டியில்லாக் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேச பயனாளிகளில், 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் நால்வருக்கு 28 ஆயிரம் ரூபா பெறுமதியான பலகாரவண்டிகளும், அதற்குரிய உபகரணங்களான பெற்றோல்மக்ஸ், குக்கர் மற்றும் கோப்பைகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன், பலகாரங்களுக்குரிய மூலப்பொருட்களை வாங்குவதற்கான 2800 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

பயனாளி ஒருவர் மாதம் ஒன்றுக்கு 280 ரூபா வீதம் தொடர்ச்சியாக, வட்டியில்லாமல் கட்டிமுடிக்கவேண்டும்.

மேலும் பயனாளி பலகாரவண்டியைத் தள்ளிக்கொண்டு திரிந்து வியாபாரம் செய்யக்கூடிய தேக ஆராக்கியம் உடையவராகவும் இருந்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (83)

## புன்னாலைக்கட்டுவனில் உள்ள வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

புன்னாலைக்கட்டுவன் தெற்கு இராணுவமுகாமிற்கு அருகிலுள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் ஒளிராமையால், பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமிற்கு முன்னால் இரவுவேளைகளில் உலவும் கட்டாக்காலி நாய்களுடன் - பயணிகள் மோதுப்படுவதாகவும், அதிகாலை வேளையில் உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லும் விவசாயிகளை இந்த நாய்கள் துரத்திச்செல்வதாகவும், அதனால் விவசாயிகள் - இராணுவத்தினரால் பொருத்தப்பட்டுள்ள முள்ளுக்கம்பிகளுள் வீழ்ந்து காயமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலாலி - யாழ் பிரதானவீதியில், 'இலங்கை மின்சாரசபையினரால் பொருத்தப்பட்டுள்ள மின்கம்ப விளக்குகள் பல, நீண்ட நாட்களாக ஒளிராது உள்ளமையும், சில மின் விளக்குகள் இரவு - பகலாக ஒளிர்கின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

பருவமழைக் காலத்தில் பயணிகள் போக்குவரத்திற்கு, வீதியோர மின் விளக்குகள் இன்றியமையாத ஒன்றாக விளங்குவதால், உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதன்மூலம், போக்குவரத்தை இலகுபடுத்தமுடிவதுடன், வீணான விபத்துக்களையும் தவிர்க்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (83)

## நெடுந்தீவு பொதுமைதானம் படையினரின் பாவனையில்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு இளைஞர்களின் பாவனையில் இருந்த மைதானத்தை - படையினரும், பொலிஸாரும் பயன்படுத்துவதால், தமது விளையாட்டு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி இளைஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு முன்னால் இருக்கும் விளையாட்டு மைதானம் - அப்பகுதி இளைஞர்களின் விளையாட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்பட்டு வந்தது. இந்த மைதானத்தில் தற்போது படையினரும், பொலிஸாரும் இணைந்து உடற்பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக நெடுந்தீவு இளைஞர்கள் இந்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மைதானத்தில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டு நடவடிக்கைகளில், தற்போது தம்மால் ஈடுபடமுடியாதிருப்பதாக நெடுந்தீவு இளைஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (44)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : ஞா.அபிசாயினி
முகவரி : கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

ஆறாவது அகவையில்



பெயர் : ஞா.சதுரஷனன்
முகவரி : கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------
முகவரி :----------------------------------------
பிறந்த ஆண்டு:----------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

பல்சுவை அரங்கு

# பனி மனிதனின் மர்மங்கள்



இததாலிக்கும், ஒஸ்ரியாவிற்கும் இடையே அல்பஷ் மலைப்பகுதியில் 5300 ஆம் ஆண்டு காலத்திற்கு முற்பட்ட மனித உடல் - பனிப் பாறைகள் உருகிய போது வெளிப்பட்டது. இம்மனித உடலுக்குப் பனிமனிதன் எனப் பெயரிட்டிருந்தார்கள்.

இந்த பனிமனிதன் எங்கே வாழ்ந்தான் என்பதை அறிந்துகொள்வதற்கு, இம் மனிதனின் பல், எலும்பு ஆகியவற்றின் மூலக்கூறுகளின் கட்டமைப்பை ஆராய்ந்துள்ளனர்.

ஒரு மனிதனின் உணவுப் பழக்கவழக்கங்கள் - அவன் வாழும் சூழலில் காணப்படும் தாவரங்களில், விலங்குகளில் இருந்தே பெறப்படுகின்றன.

மனித உடலின் கலங்கள் அழிந்தாலும் - பல், எலும்பு ஆகியன மூலக்கூறுகள் மரணத்தின் பின்பும் மாறுபடாது காணப்படுகின்றது. குறிப்பாக, இளமைக்காலத்து உணவுப் பழக்கவழக்கங்கள் பற்களிலும், முதுமைக்காலத்து உணவுப் பழக்கவழக்கங்கள் எலும்புகளிலும் காணக்கூடிதாக உள்ளது. இதனால், இப்பனிமனிதன் காணப்பட்ட 'அல்ப்' பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் - மண், நீர், ஆகியவற்றை ஆராய்ந்தார்கள். பின் பனிமனிதனின் பல், எலும்பு ஆகியவற்றில் காணப்பட்ட (**Bio minerals**) எனப்படும் உயிர்களுக்குத் தேவையான கனியவளங்களை ஆராய்ந்தார்கள், இவ் ஆய்வுகள் அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடத்தப்பட்டன.

முடிவில் இந்த மனிதன் உடல் காணப்பட்ட இடத்திலிருந்து, 60 மைல் சுற்றுவட்டத்திற்குள் வாழ்ந்தான் என்பதும் - பல், எலும்பு ஆகியவற்றில் காணப்பட்ட மாறுபட்ட கனியவளங்கள், அவனது இடப்பெயர்ச்சியையும், காபன் அணுக்களில் ஏற்பட்ட சிதைவுகள்மூலம் அவனது வயது 46 என்பதையும் அறிந்து கொண்டார்கள். மேலும், செப்பை ஆயுதங்களாகப் பாவித்த காலத்தில் வாழ்ந்ததாகவும் அறிந்து கொண்டார்கள்.

# எகிப்திய மம்மிகள்



தற்காலத்தில் இறந்த உடல்களைப் பதபபடுததி, நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கும் எம்பாமிங் (**EMBALMING**) முறையை முதலில் எகிப்தியர்கள் அறிமுகப்படுத்தி இருந்தார்கள். புகழ்பெற்ற மன்னர்கள் மரணமடைந்த பின், பாரோஜ் (**PHARAOH**) மன்னர்களைப் பதப்படுத்தி பிரமிட்டுக்கள் வைத்தார்கள்.

இவ்வகையான பாரோ ரம்செஷ் (**PAHRAOH RAMSES**) என்ற எகிப்திய மன்னனின் உடல் - 140 ஆண்டுக்கு முன், வட அமெரிக்க நூதனசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. 3 ஆண்டுகளுக்கு முன் கனடாவிலுள்ள நூதனசாலைக்கு, அதன் உண்மையான காலப் பகுதியை அறிந்துகொள்வதற்காக அனுப்பப்பட்டிருந்தது. ஆய்வுகள்மூலம் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சி செய்த ஒரு மன்னனின் உடல் என்பது அறியப்பட்டிருந்தது. இந்த அரிய பாரம்பரிய மம்மி (**MUMMY**) கிடைத்த பின், இவை போன்ற வேறு அரிய எகிப்தின் தொல்பொருட்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக, பிரித்தானிய அருங்காட்சியகத்தில் உள்ள றொசெட்டா கற்கள் (**ROSETTA STONES**). இக்கற்படிவங்கள் 1799 ஆம் ஆண்டு நெசெற்றா என்ற இடத்தில் காணப்பட்ட மனித உருவங்கள், பதியப்பட்ட கற்கள், நெபெற்ரிரி (**NEFERTITI**) எனப்படும் பேர்ளின் அருங்காட்சியகத்தில் உள்ள மார்பளவு சிலைகள் (**BUST**) என்பனவே அவையாகும்.

# ஆயுள்காலமும் புழுக்களும்



மரபணுக்களிலும், ஓமோன்களிலும் மாற்றம் செய்யப்பட்ட புழு ஒன்றின் ஆயுட்காலத்தை 6 மடங்காக - உயர்த்த முடிந்ததாக விஞ்ஞான சஞ்சிகை ஒன்று தெரிவித்திருந்தது.

புழுவின், இன உற்பத்தி தொடர்பான உறுப்புக்களை அகற்றியும், ஹோமோன்களில் மாற்றங்களையும் செய்திருந்தார்கள்.

இவர்களின் புதிய கண்டுபிடிப்பினால், பல முலையூட்டிகளின் வாழும் காலத்தை அதிகரிக்கமுடியும் எனக் கருதுகிறார்கள்.

உடம்பில் காணப்படும், சக்தியைக் கொடுப்பதற்கு தேவையான 'குளுக்கோசை' கட்டுப்படுத்துவதில் இன்சுலின் முக்கிய பங்காற்றுகிறது.

இன்சுலின் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது, நீண்ட காலத்துக்குப் புழுக்கள் வாழ்வதை அவதானித்துள்ளார்கள்.

இன உறுப்புக்களை அகற்றும்போது, ஹோமோன்களில் மாற்றத்தை உண்டாக்கி, ஆயுட்காலத்தை அதிகரிக்க உதவியதாகத் தெரிவித்தனர்.

மனிதனின் ஆயுட்காலத்தை உயர்த்தவும் இந்த ஆய்வுகள் உதவலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

# அன்னங்களின் நீண்ட பிரயாணம்

அன்னங்களின் நீண்ட பிரயாணத்தின் பாதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மிகச்சிறிய ரான்ஸ்மீற்றர் (**TRANSMITTER**) எனப்படும் ரேடியோ அலைகளை உணரக்கூடிய கருவிகளை - அன்னப்பறவைகளின் உடலில் பொருத்தி, அவற்றின் நீண்ட பிரயாணத்தின் பாதையை ஆகாயத்திலுள்ள செயற்கைக்கோள்களின் உதவியுடன் அறிவதற்கு பி.பி.சியும், வேறு பறவைகள் தொடர்பான அமைப்புக்களும் திட்டமிட்டுள்ளன. ஆரம்பகாலத்தில் பறவைகளின் நீண்ட குளிர்கால பிரயாணத்தை ஆராய்வதற்கு- அவை பயணத்தை ஆரம்பித்த இடம், முடிவாக அடைந்த இடம் இரண்டையுமே அவர்களால் ஆய்வு செய்யமுடிந்தது. ஆனால், தற்போது அவற்றின் பிரயாணத்தின் முழுப்பாதையையும் கண்டு கொள்வதற்கு வழி ஏற்பட்டுள்ளது.



இப்பறவைகளில் பொருத்தப்பட்டுள்ள "ரான்ஸ்மீற்றர்கள்" மூலம் தமது நீண்ட பிரயாணத்தின்போது - எவ்விடங்களில், குறிப்பாக எந்தக் குளங்களில் அல்லது ஆறுகளில் நீர் அருந்துவதற்கும், உணவுத்தேவைகளை நிவர்த்தி செய்வதற் கும் தரைக்கு வருகின்றன என்பதையும் அறிந்துகொண்டார்கள்.

மேலும் இப்பறவைகளின் உடலில் பொருத்தப்பட்ட "ரானஸ்மீற்றர்கள்" அது எவ்விடத்தில் பறந்துகொண்டிருக்கிறது, அதன் வேகம், அவை பறக்கும் இடத்தின் வெப்பநிலை என்பனவற்றைக்கூடத் துல்லியமாக அறிந்துகொள்ள உதவுகின்றன.

# குளோனிங் முறை



குளோனிங் முறையில் டொலி என்ற பெயருடைய செம்மறி ஆடொன்றை உருவாக்கி இருந்தார்கள். இந்த ஆய்வில் - மேலும் கூடுதலான ஆய்வுகள் தேவையென, அது தொடர்பான அறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பல மிருகங்கள் குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டிருந்தபோது, முழுமையான வெற்றியைத் தரவில்லை. எலி, பன்றி ஆகியன குளோனிங்முறையில் சுமாரான வெற்றியைக் கொடுத்துள்ளது. செம்மறி ஆடு, பசுக்கள் மிகக்குறைவான முறையிலேயே வெற்றியைக் கொடுத்துள்ளன.

குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட மிருகங்கள் கர்ப்ப காலத்தில் மரணமடைந்துள்ளன. சிலவேளைகளில், பிறந்து சில நாட்களிலும் மரணமடைந்துள்ளன.

முதன்முதலில் குளோனிங்முறையில் செம்மறி ஆடொன்றை உருவாக்கிய பேராசிரியர் அயன் வில்மத் குறிப்படும்போது - சாதாரணமாகக் கருக்கட்டலின்போது, பெண்முட்டையொன்றும் ஆண்கருவொன்றும் இணைக்கின்றது. இணைந்து ஏற்படும் கருவில், இரண்டினதும் பரம்பரை அலகுகள் வெளியிடப்படுகின்றன. ஆனால், குளோனிங்முறையில் முட்டையின் பரம்பரை அலகுகள் - கலம் ஒன்றின் பரம்பரை அலகுகளுடன் இணையும்போது, முற்றிலும் வேறுபட்ட புரத அமைப்பை உருவாக்குகின்றது. இதனால், முட்டை சாதாரண வளர்ச்சிக்காகத் தனது பரம்பரை அலகில் மாற்றம் செய்வதற்குப் போராட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இருந்தாலும், குளோனிங்முறையில் உருவான மனித கருவில் - நீரிழிவு, இருதய நோய் ஆகியவற்றைத் தடுப்பதற்கு ஏற்றமுறையில் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளார்கள்.

# வண்டுகளின் மரபணுத் தொகுதி

தானியங்கள், அரைத்த மா வகைகள் நீண்ட நாட்களுக்கு - பாத்திரம், சாக்குகளில் அடைத்து வைக்கப்படும்போது தோன்றும் சிகப்பு வண்டுகளின் மரபணுத்தொகுதியை (**GENONE**) ஆராய்வதற்கு விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்த வண்டுகள் பங்கஸ் (**FUNGAS**) பக்ரீரியாக்களின் தாக்கலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக் சில இரசாயனப் பொருட்களை சுரக்கின்றன. பல புதிய மருந்துகளை கண்டுபிடிப்பதற்கு இந்த இரசாயனப்பொருட்கள் உதவுமெனக் கருதப்படுகின்றது.

விவசாயத்திற்கு உதவக்கூடிய பல பூச்சியினங்களில் மரபணுத் தொகுதியை அமைத்துக் கொள்வதில் சிரமங்கள் இருப்பதாக, இந்த ஆய்வின் முடிவில் பிரவுன் என்ற உயிரியலாளர் கருத்துத் தெரிவித்தார்.

# பூமியில் சூரியனின் கதிர்வீச்சு



சூரியனின் கதிர்வீச்சில் மாற்றங்கள் ஏற் பட்டு வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள் ளார்கள். அண்மையில் இரு சக்திவாய்ந்த ஒளிக்கீற்றுக்கள் பூமியை அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 25 ஆண்டுகளாகச் சூரியனில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை, வானவெளியில் உள்ள செயற்கைக் கோள்களின்மூலம் விஞ்ஞானிகள் அவதானித்து வருகிறார்கள்.

அண்மையில் வட அத்திலாந்தைக் கடந்து சென்ற ஆகாய விமானங்கள - சிறிய அளவிலான கதிர்வீச்சுக்கு உட்பட்டதாகவும், சர்வதேச செயற்கைக்கோள் ஆய்வுகூடத்தில் கடமை புரிந்த விண்வெளி வீரர்கள் - உள்ளே மிகவும் பாதுகாப் பான இடங்களை நோக்கி செல்ல வேண்டியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இரு ஜப்பானிய செயற்கைக்கோள்கள் - இந்தக் கதிர்வீச்சால் அதன் தொழிற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டதாகவும், நோர்வேயில் செயற்கைக்கோள்கள்மூலம் நடத்தப்பட்ட வீதிக் கட்டுப்பாடுகள் நிலைகுலைந்தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திரை விமர்சனம்

# ஒற்றன்



வில்லுக்கு அர்ஜுனன்போல, பொலிஸ் அதிகாரியாகவே பார்த்துப் பார்த்துப் புளித்துப்போன அர்ஜுனின் வழக்கமான பொலிஸ் பாணியும், தேசபக்தியும் - வி.பி.ஜ அதிகாரியான அவர், இந்தியாவில் கலவரம் ஏற்படுத்திப் பிரதமரையும், ஜனாதிபதியையும் கொல்லத்திட்டமிடும் - பாகிஸ்தான் தீவிரவாதிகளை, ஒரு கை பார்க்கின்றார். இயக்குநர் இளங்கண்ணன் கைதட்டல் பெறும் விதத்தில் திரைக்கதையை அமைத்திருகிறார். இளங்கண்ணன் இளமையுடன், புதுமையையும் சேர்த்திருக்கிறார். அர்ஜுன் பல வேடங்களில் வருகிறார். அவருக்கு சமையல் காரவேடம் கச்சிதமாகப் பொருந்துகிறது. பொலிஸ் அதிகாரியின் மகளாக வரும் சிம்ரனிடம் காதல் பாட்டு, சண்டைக் காட்சிகள் - படத்துக்கு ஏற்றப்பட்ட குளுக்கோசுகள். வழக்கமாக அர்ஜுன் படத்தில் - தேசத்துக்காக தனது காதலி அல்லது தாயைப் பறிகொடுப்பது வழமை. இங்கே - தாய் மனோரமா. வடிவேலு படத்தின் வறட்சிக்கு ஊற்றப்பட்ட தண்ணீர். படத்தின் இசையமைப்பாளர் பிரவீன்மணி- இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானின் சிஷ்யராம். இதனால், ஆங்காங்கே ஏ.ஆர்.ஆர். வாசனை அடிக்கின்றது. சண்டைப்பயிற்சி பீற்றர் ஹெயன். ஆங்கில மோகம் இவருக்கு உச்சக்கட்டம்போலும். அர்ஜுன் இந்தப்போக்கில் போனால் தியாகிகள் பட்டியலில் சேர்க்கப்படுவது நிச்சயம்.

- சுதர்ஷி

# வாரம் ஒரு யோகாசனம்

## கோராசனம்

முதலில் பத்மாசனத்தில் அமர்ந்து, பிறகு இரு உள்ளங்கால்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். பின்னர் இரு உள்ளங் கைகளையும் முன்னங்கால்கள் மேல் பதிக்கவும். அப்படியே மெதுவாக அமத்தவும். கடுமையான கஷ்டங்களும், நோவும் ஏற்படும். அப்படியே மூச்சைச் சீராக உள்ளிழுத்து விடவேண்டும். நாளடைவில் நோவும், வலியும் நின்றுவிடும். இதைச் சற்று கடுமையான முறையில் செய்ய வேண்டும். பின்பு படிப்படியாக உள்ளங்கால்கள் இரண்டையும் புரட்டவேண்டும். கடுமையான வலிகள் தோன்றும் மூலத்திற்கும், மர்மஸ்தானத்திற்கும் இடையில் வைக்கவேண்டும். அப்படியே அமர்ந்து சீராக மூச்சை இழுத்துவிட வேண்டும். இதன்போது சிந்தனைகள் ஒரு நிலையில் இருக்கவேண்டும்.



### நன்மைகள்

இது கால்களைத் திடப்படுத்தும். பசியையும், வரட்சியையும் தடுக்கும். பாதங்கள் வலிமை பெறும், வாதநோயை நீக்கும். விந்துவை வளர்க்கும். தொடைகளின் தசைகளை வலிமை பெறச் செய்யும். இவ்வாசனம் ஆண்களைவிட, பெண்களிற்கே பெரும் நன்மை அளிக்கிறது. பெண்களிற்கு மாதவிடாய் காலங்களில் கூடியநோவுடன், கழிவுகள் அகற்றப்படுகின்றது. தொடர்ந்து செய்து வருவதால், கற்பாசனம் நல்ல ஆரோக்கியமாக வளமுடன் அமையும். அத்துடன் கர்ப்பம், கர்ப்பகாலத்தில் உடல் ஆரோக்கியம் கட்டிக் காக்கப்படுகின்றது. பிரசவம் சுகமாக அமையும். ஆண் - பெண் இருவருக்கும் சிறுநீர் எரிச்சல், கடுப்பு நீங்கும். இடுப்பு வலிமை பெறும். வயிற்றுப் பகுதிக்குக் கூடிய இரத்தம் செலுத்தப்படுவதால், சிறுநீரகம் ஒழுங்காக வேலை செய்யும். வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்தவர்கள் - வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று செய்யவேண்டும்.

*தருபவர் - மா.மகாநேசன்*

# காரணமில்லாது ஏற்படும் மரணங்கள்



குழந்தைகள் படுக்கையில் இருக்கும்போது, எதுவித காரணங்களுமின்றி மரணமடைந்து விடுகின்றன. இது தொட்டில் மரணம் (**cot death**) எனக் குறிப்பிடப்படுகிறது.

இதுபோன்று வளரந்தவரகளிடையேயும் காரணமின்றி மரணங்கள் நிகழ்கின்றன. அண்மையில் இது தொடர்பாக 'லான்செற்' (**lancet**) என்ற சஞ்சிகை நடத்திய ஆய்வில் - இம் மரணங்களுக்குப் பரம்பரைக் (**Hereditary**) காரணங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மரணங்களைச் சந்தித்துக் கொள்பவர்கள் ஆரோக்கியமானவர்களாகவே இருப்பார்கள். பின் திடீரென மயங்கி வீழ்ந்து, மரணத்தைத் தழுவிக்கொள்வார்கள். இவர்களின் குடும்ப வரலாறுகளை ஆராய்ந்தபோது , அநேக மானவர்களுக்கு இருதய நோய் இருந்தது அறியப்பட்டுள்ளது.

# கடல்வாழ் மீனினங்கள்



கடலில் மேற்கொண்ட ஆய்வுகளின்மூலம் 600 இற்கும் மேற்பட்ட புதிய மீனினங்கள் - கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் அதிக மீனினங்கள் இதுவரை அறியப்படாமல் உள்ளது.

10 நாடுகளைச் சேர்ந்த 300 விஞ்ஞானிகள் - இந்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆபத்தை நோக்கியுள்ள பல மீனினங்களை, எவ்வாறு பாதுகாப்பதென இவர்கள் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பசுபிக்கடலோரப் பகுதிகள், அத்திலாந்திக் கடலின் அடியில் வாழும் பல' மீனினங்கள், கடலின் மிகவும் சூடான நீருள்ள இடங்கள் ஆகியன ஆராயப் பட்டுள்ளன. ஆய்வுகளின்போது, சன்மன் மீன் குஞ்சுகள் - கடல் நீரிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் ஆற்றுநீர் உள்ள பகுதிகளை நோக்கிச் செல்வதையும் ஆராய்ந்துள்ளார். அநேகமான சல்மன் மீன்கள் கடலில் வாழும் காலத்தில் மரணமடைவதால், அவற்றைக் காப்பாற்றுவதற்கான வழிமுறைகளையும் ஆராய்ந்துவருகிறார்கள்.

# ஒன்றாகும் ஆறு

ரஷ்யாவில் கஸகஸ்தான், ஸ்பெகிஸ்தான் ஆகிய மாநிலங்களைப் பிரிக்கும் "ஏரல் கடல்" இரு நாடுகளுக்கூடாகவும் பாய்கின்றது. இந்தக் கடல் உலகில் நாடுகளுக்கிடையே பாயும் கடல்களுள் மிகவும் பாரிய கடலாகக் கருதப்படுகிறது. இந்தக் கடல் 40 ஆண்டுகளில் அதன் ஆழத்தில் அரைப்பங்காக குறைந்துள்ளது. மேலும் முன்னர் இருந்த நீரின் கனவளவில் 90% குறைந்து விட்டதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கரையோரத்தில்



இருந்த நீர்- உட்பக்கமாகச் சென்றுவிட்டதால், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் -தமது தொழிலை இழந்து விட்டார்கள். இக்கடலின் கரையோரத்தில் பருத்தித் தோட்டங்களில் பாவித்த கிருமிநாசினி, உரம் ஆகிய இரசாயனப்பொருட்கள் இந்தக் கடலில் கரைந்துள்ளதால், இந்த நீரின் கனியுப்புக்களின் அளவு 40 ஆண்டுகளில் 7 மடங்காக அதிகரித்துள்ளது.

இக்கடலுக்கு அருகில் வாழ்ந்த மக்கள் - இரத்தச்சோகை, புற்றுநோய், ஈரல் நோயால் பாதித்தமையும் ஆய்வின்மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால், கடலின் நீர் மட்டத்தை உயர்த்தி, மீன்பிடித் தொழிலை விருத்தி செய்யவும், மக்களின் ஆரோக்கியத்தை பேணவும், எல்லைப்புறத்தை இலகுவாக கண்காணிக்கவும் - பாரிய அணைக்கட்டொன்றை இரு நாடுகளின் எல்லைகளுக்கூடாக, கடல் பாயும் இடத்தில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

# கடற்குதிரை



துருவப்பகுதிகளில் வசிக்கும் கடல் குதிரைகள் - கூடுதலான நேரங்களில், தமது ஒரு பக்கத்திலுள்ள கையையே பாவிப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவித்துள்ளன.

இவை கடலின் அடியில் சிப்பி இனத்தைச் சேர்ந்த உயிரினங்களைப் பிடிப்பதற்கு, தமது வலது கையையே பாவிக்கின்றன.

இந்த மிருகத்தின் உடற்கூற்று அமைப்பை ஆராய்ந்தபோது, வலது பக்கத்திலுள்ள கை எலும்புகள் கூடுதலான வளர்ச்சி பெற்றிருந்ததை அவதானித்தார்கள். மனிதர்களில்கூட இடது கைப்பழக்கம் கொண்டவர்களில், இவ்வித இயல்புகள் இருப்பதை அவதானிக்கமுடிந்தது. சிம்பன்ஸி எனப்படும் குரங்குகள், வேறு இனக் குரங்குகள், காகங்கள் ஆகியவற்றிலும் ஒரு பக்கத்து உறுப்புக்களை அதிகம் பாவிக்கும்நிலை அறியப்பட்டுள்ளது.

சில வேலைகளைச் செய்வதற்கு மூளையின் ஒரு பாகம் - மற்றப் பாகத்திலும் பார்க்க அதிக வளர்ச்சி அடைந்திருப்பது - 150 ஆண்டுகால ஆய்வின்பின் தெரிய வந்துள்ளது. மொழிவளர்ச்சி (**Lingustie**) கூட, ஒரு பக்கத்து மூளை வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. ஆதிகாலத்து மனிதன் கற்களில் ஆயுதங்களைாத் தயாரிப்பதற்கும், வேறு தேவைகளுக்கும் ஒரு பக்கத்து கையையே கூடுதலாகப் பாவித்ததாக அறியப்பட்டுள்ளது.



பசுபிக் காகங்கள் - தமது இடது பாகத்து அலகுகளால், எறும்புகளைப் பிடிப்பதற்கு, இலைகளில் வடிவமைப்புக்களை உருவாக்குவது தெரியவந்துள்ளது.

கடல் குதிரை போன்று "சீல்" எனப்படும் இன்னொரு வகையான கடற்குதிரையினுடைய கால்களின் இடது பக்கத்தின் நகங்களும் குறைவான வளர்ச்சி கொண்டிருந்தன. அவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்தபோது, மண்ணுக்குள் மறைந்திருக்கும் விலாங்கு மீன்களை வெளியே வரச்செய்வதற்காகத் தொடர்ந்து மண்ணில் இடது கையை மோதுவதை அவதானித்துள்ளார்கள.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்*
*முடிந்தாலும் பீழை தரும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# கடலில் மையங்கொள்ளும் போர்ச்சூறாவளி...!

சிறிலங்கா கடற்படையினரின் தேவைகளை முழு அளவில் பூர்த்திசெய்ய அமெரிக்க கடற்படை தயாராக இருப்பதாக, அந்த நாட்டின் கடற்படை நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதி அட்மிரல் வோர்ண் கிளார்க் என்பவர், சிறிலங்காவின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரிக்கு உறுதியளித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அண்மையில் - அமெரிக்காவில் நடைபெற்ற கடற்படைத் தளபதிகளுக்கான சந்திப்பு ஒன்றின்போது, சந்தகிரி - கிளார்க் அவர்களை சந்தித்து பேச நேர்ந்தபோது சிறிலங்கா கடற்படையினரின் இன்றைய நிலை, அவர்கள் எதிர்கொள்ளவேண்டியுள்ள அச்சுறுத்தல்கள், சவால்கள் மற்றும் அவர்களுக்கான தேவைகள் குறித்து சந்தகிரி விளக்கியதையடுத்தே, கிளார்க் இந்த உறுதிமொழியைத் தெரிவித்துள்ளாராம்.

இது சம்பந்தமாக நிலைமைகளை நேரில் ஆராயும் நோக்குடன், அமெரிக்க கடற்படையின் உயர்மட்டக்குழு ஒன்று மிகவிரைவில் சிறிலங்காவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும், அவர்கள் இங்கு வந்ததும் மேற்கொண்டு எந்தவகையிலான உதவிகளை வழங்குவது என்பது குறித்து மதிப்பீடொன்றைச் செய்வார்கள் என்றும் அறியவந்துள்ளது.

ஒரு புறம் சமாதானம் குறித்துப் பேசியும், வலியுறுத்தியும் வரும் அமெரிக்கா, இன்னொருபுறம் சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகளையும், பாதுகாப்புக் கட்டமைப்பையும் பலப்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகளுக்கு, முன்னுரிமை வழங்கி பல்வேறு வகையிலும் ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் ஏனைய ஆயுத தளபாட வசதிகளையும் வழங்குவதிலும் முனைப்புடன் செயற்படுவதுதான் சந்தேகத்துக்கிடமான விடயமாகும்.

குறிப்பாக, சிறிலங்காவின் கடற்படையைத் தரமுயர்த்துவதிலும், நவீனமயப்படுத்தி வலிமைப்படுத்துவதிலும் அதற்கான கடற்கலங்கள் மற்றும் பீரங்கிகள் போன்றவற்றை கொள்வனவு செய்வதிலும் கடந்த சில மாதங்களாக அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட வேறு சில நாடுகளினதும் உதவியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த பல மாதங்களாகவே, கடற்படையினர் பல தடவைகள் போர்நிறுத்த உடன்பாட்டு விதிமுறைகளை மீறியுள்ளதுடன், அவற்றிக்கு பொய்யான காரணங்களை விருத்திசெய்தும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் யாவும் - விடுதலைப் புலிகளை வேண்டுமென்றே சினங்கொள்ளச் செய்யும் போர் முன்னெடுப்பு மூலோபாய நடவடிக்கையாகவே உணரக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை, தரையிலும் இராணுவத்தினர் இதே போன்றே சமாதானத்தைக் குழப்பி மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்க முனையும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனாலும், உலக சமூகத்தின் சமாதானம் மீதான செயற்பாடுகளுக்கு மதிப்புக்கொடுத்து அதனை ஆதரிக்கும் விடுதலைப் புலிகள் - படைத்தரப்பினரின் எரிச்சலூட்டும் நடவடிக்கைகளின்போதும், பொறுமையுடன் மௌனம் காப்பதை படைத்தரப்பினர் பலவீனமாக நினைக்கிறார்கள் போலும்!

சில வாரங்களின் முன்னர் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றை கடற்படையினர் கண்டதாகவும், கண்காணிப்புக் குழுவினரால் இத்தகவல் புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டு, கப்பல் இடம்மாறி மறைந்து போய் விட்டதாகவும், ஒரு ஆதாரமற்ற செய்தியைப் பரப்பி- கண்காணிப்புக்குழுத் தலைவர் மீது குற்றம் சாட்டி அவரைப் பதவி விலகுமாறு நோர்வே அரசிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்ததுடன், படைத்தரப்பு இனிமேல் கண்காணிப்புக்குழுவின் அறிவுறுத்தல்களை கேட்கவேண்டிய அவசியமில்லை என்றும், கட்டளை பிறப்பித்ததையடுத்து, கடற்படையினரின் அதிகாரச் சுயநிர்ணயம் தட்டிக்கேட்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

இதனையடுத்து கடற்படை நடவடிக்கை இயக்குநரான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் கடற்புலிகள் தொடர்ந்தும் பயிற்சியில் ஈடுபட்டுவரும் பட்சத்தில், அதற்கெதிராக கடற்படையினர் தங்கள் பாதுகாப்பு கருதி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாமென எச்சரித்துள்ளமையானது, ஒரு ஆபத்தான சூழலுக்கான சமிக்ஞையாகவே கொள்ளவேண்டும்.

கண்காணிப்புக்குழுவின் கட்டளையைப் புறக்கணிக்கும் உரிமை கடற்படைக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டமையானது, சமாதானத்தை கடற்படையினர் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி குழப்பும் சுதந்திரத்தை வழங்கியுள்ளது எனலாம்.

எனவே, கடலில் ஒரு போர்ச் சூறாவளி மையங்கொள்ளும் சூழல் ஜனாதிபதியின் தொலைநோக்கற்ற செயற்பாட்டால் உருவாக்கப்பட்டுள்ளது என்றே உணரக்கூடியதாகவுள்ளது.

## நாடும் நடப்பும்




செய்தி - ஹக்கீம் தீயசக்திகளின் ஆலோசனைகளுக்கிணங்க செயற்படுகிறார்.

# ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்விற்கு புலிகள் வந்திருப்பது வரவேற்கத்தக்கது

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தகவல்

தமீழத்தைக் கைவிட்டு சமஷ்டி முறையிலான ஒரு தீர்வுக்கு விடுதலைப்புலிகள் வரவிரும்புவது வரவேற்கத்தக்க விடயமாகும், என்று புதிய இடதுசாரிகள் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் திட்ட நகல் தொடர்பாகக் கருத்துக் கூறுகையில்,

ஒரு நாட்டுக்குள் இரண்டு அரசுகள் என்கின்ற அமைப்பில் தற்போது விடுதலைப்புலிகள் வந்துள்ளனர். தமது தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு, அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தினை - அரசு உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஜே.வி.பி, சிஹல உறுமய ஆகிய கட்சிகள், எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதன்மூலம், தனது நல்லெண்ணத்தினை வெளிப்படுத்த வேண்டும் என்றும், விக்கிரமபாகு கருணாரட்ண மேலும் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் நடைபெற்ற பேச்சுக்களில் முன்னேற்றமான ஒரு நிலைமை உருவாகியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இடைக்கால நிர்வாக திட்டவரைபு குறித்து ஹிந்து நாளிதழ் திரிபுபடுத்திப் பிரசாரம்

ஈழத்தமிழர்களுக்கெதிராக இனத்துவேசத்தைக் கிளப்பி வந்த ஹிந்து நாளிதழ், உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு, இந்திய மக்களைக் குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களைத் திசை திருப்ப முயன்றிருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கையும், கிழக்கையும் ஐந்து வருடங்களுக்கு, தானே ஆளுவதற்குப் பிரபாகரன் முயற்சிப்பதாகவும், இலங்கையின் அரசியல் சாசனத்திற்கு முற்றிலும் ஒவ்வாத விடயங்களை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளதால், மீண்டும் போரை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் மறைமுகமாக அழைப்பு விடுத்துள்ளதாகவும், உண்மைக்குப் புறம்பானதும், நியாயப்படுத்த முடியாததுமான கருத்தை வெளியிட்டு, ஈழத்தமிழர்களுக்கு எதிரான பிரசாரத்தை ஹிந்து பத்திரிகை மீண்டும் தொடர்கிறது.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நகர்வில், கடந்த போரில் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் இழப்புக்கள் உறுதிசெய்யப்படும் பட்சத்தில், அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளதை, நியாயமற்ற கோரிக்கை என்று குறிப்பிட்டுள்ள ஹிந்து நாளிதழ், வடகிழக்குக்கான நிர்வாகக் குழுவில் தமிழர்களின் பெரும்பான்மை வேண்டுமென்று கோரியிருப்பதை அநீதியான கோரிக்கை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த இடைக்கால நிர்வாக அலகு கையளிக்கப்பட்டு, 24 மணித்துளிகளுக்குள் துள்ளிக்குதித்துள்ள சந்திரிகா கட்சி உட்பட, ஜே.வி.பி., சிஹல உறுமய, ஈபிடிபி போன்ற கட்சிகளுக்காக வக்காலத்து வாங்கியுள்ள ஹிந்து நாளிதழ், இவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, இந்த நிர்வாக அலகை அலட்சியம் செய்வதே சரியானது என்று கருத்துப்படவும் செய்திக் கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிற்கான நிதி, நிர்வாகப் பொறுப்பை - புதிதாக உருவாக்கப்படவுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையிடம் வழங்குவதுடன், இதன் வருடாந்த நிதிநிலையை ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிதி நிறுவனம் பரிசீலனை செய்து உறுதிப்படுத்தவேண்டும் என்று சர்வதேச விதிமுறைக்கு ஏற்ப அறிவிக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பத்தை, திருகோணமலையில் - இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள எண்ணெய்க்குதங்களுக்கு எதிரான ஒரு விண்ணப்பம் என்று தேவையின்றித் தொடர்புபடுத்தி, இந்திய மக்களின் வெறுப்பை ஹிந்து பத்திரிகை வலிந்து உருவாக்க முட்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களின் பின்னர், இந்த இடைக்கால நகலின் தொடர்ச்சியாக, ஒரு சுதந்திரத் தேர்தல் நடாத்தப்பட்டு, எதிர்கால ஆட்சிமுறைக்கு ஒரு தீர்வு எட்டப்படும் என்றும், அவ்வாறான ஒரு தேர்தல் நடாத்தப்பட வழிவகை இல்லாமற் போகும் பட்சத்தில், இருபகுதியினரும் ஒரு மூன்றாந்தரப்பின் பொது மத்தியஸ்தத்தில் பேச்சு நடாத்தி, தீர்வுகாண எத்தனிப்பர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை, விடுதலைப் புலிகள் மீண்டும் 5 வருடத்தின் பின்னர் தங்கள் ஆயுதங்களைப் புதுப்பித்து, போரை மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிடுவதாகவும் ஹிந்து நாளிதழ் மொழிபெயர்ப்புச் செய்துள்ளது.

எப்படியும் இந்த இடைக்காலத் தீர்வின் கீழே, விடுதலைப் புலிகள் - ஓர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக, விசமத்தனமான பிரசாரத்தை அப்பட்டமாகச் செய்துள்ளது.

# பிரதம நீதியரசருக்கெதிராக குற்றவியல் பிரேரணை தயார்

## ஐ.தே.க. கொண்டுவருகிறது

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவர, ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

பாதுகாப்பு அமைச்சரின் பொறுப்புக்கள் குறித்து, அண்மையில் உயர்நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையின்போது பிரமத நீதியரசர் சரத் என் சில்வா நடந்துகொண்டவிதம், தெரிவித்த கருத்துக்கள் - நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாகச் சபை முதல்வர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார கூறியுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க - நாடாளுமன்ற சிறப்புரிமை தொடர்பாக வெளியிட்ட கூற்றையும் சபை முதல்வர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்படவிருக்கிறது.

(01)

# அவலங்கள் தொடரும் நிலையில் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து



சிறிலங்கா கடற்படையினரால் யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு அடிப்படைப் போக்குவரத்துக்கு ஆதாரமான, சகல பாதுகாப்பான படகுகளும் இழக்கப்பட்டுள்ளன. கடைசிவரை பயன்படுத்தப்பட்டுவந்த குமுதினியும், அதன் ஏரா உட்பட்ட பகுதிகள் உடைந்ததால், செயலிழந்து, நெடுந்தீவு இறங்குதுறையில் தரித்து நிற்கின்றது. இப்போது திறந்த மேற்பரப்புடைய இருக்கைகள் அற்ற நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சமுத்திரதேவா என்ற படகு போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளது.

யாழ். புங்குடுதீவு - குறிகட்டுவானிலிருந்து ஏழு கடல் மைல்கள் தொலைவில், ஆழ்கடலில் நெடுந்தீவு உள்ளது. ஆழ்கடலில் இருப்பதால், இதற்குச் சிறப்புக் கட்டுமானப் படகுகளே போக்குவரத்தில் பயன்பட்டுவந்தன. 1963 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட குமுதினி என்ற கூடாரம் அடிக்கப்பட்ட மரக் கட்டுமான, வீதி அபிவிருத்தி அதிகரசபை படகே, தொடர்ந்து போக்குவரத்துக்குப் பயன்பட்டுவந்துள்ளது.

தமிழீழ வரலாற்றில் முதற்கடற்படுகொலை- சிறிலங்கா கடற்படையினரால் 1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி - குமுதினிப் படகிலேயே நிகழ்ந்தது. தற்போது நெடுந்தீவிற்குப் பாதுகாப்பான படகுப் போக்குவரத்து இல்லாமல் போனதற்கு - இலங்கை கடற்படையே காரணம். தற்போது மழை, கடற்கொந்தழிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில், பாதுகாப்பான போக்குவரத்துக்குக் குமுதினியே ஏற்றது. ஆனால், பொறுத்தகட்டத்தில் அது செயலிழந்து இருக்கிறது. இதனைத் திருத்தும் டொக் (**Dock**) - ஊர்காவற்றுறையில் உள்ளது. கடற்படை உயர்பாதுகாப்பு வலயமாகவுள்ள, ஊர்காவற்றுறை கடற்கோட்டையைத் தாண்டி, டொக்கிற்குச் செல்ல - கடற்படை அனுமதிக்க வேண்டும். அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது கிடைத்த பின்பே திருத்தம் ஆரம்பமாகும் எனவும், யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர். அதனால், ஜனவரியின் பின்பே திருத்தவேலை முடியும். அதுவரை மழை, கடற்கொந்தழிப்பினால் கடலில் நெடுந்தீவு மக்கள் அலைக்கழிக்கப்படப் போகிறார்கள்.

புதிதாக ஒரு போக்குவரத்துப் படகைக் கட்டுவதற்கு- யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் திட்டம் கொடுக்கப்பட்டது. ஆனால், வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிதியை வழங்கவில்லை. ஆனால், நெடுந்தீவு - குறிகட்டுவான் கடற்போக்குவரத்தில் ஆறு பயணிகள் படகுகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இயக்கப்பட்டுவந்தன.

குமுதினி, எலரா, வடதாரகை, மணிமேகலை, அலையரசி, வலம்புரி என்பன அப் படகுகள் ஆகும். இவை குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவுசெல்ல ஒரு மணிநேரம் எடுக்கும். இவற்றில், இருக்கைகளில் இருந்து 75 பேரும், நின்று 25 பேருமாக 100 பேர் பயணம் செய்யலாம். இவற்றைவிட, உலோகத்தால் ஒரு கப்பல்போல - பல வசதிகளுடன், மழைநீர் உட்புகாமல், குடிநீர் வசதிகளுடன் 2 படகுகள் கட்டப்பட்டு, போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டன. அவை அலையரசி, வலம்புரி என்பனவாகும். 1980 ஆம் ஆண்டில், அலையரசி பழுதடைந்து, ஊர்காவற்றுறை செல்லும் மார்க்கத்தில் காரைநகர்- நீலங்காடு கடலில் மூழ்கிவிட்டது. 1991 ஆம் ஆண்டில், வலம்புரிப் படகு - கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. வலம்புரி 50 நிமிடங்களில் குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவிற்குச் செல்லும். இதில் 125 பேர் பயணம் செய்யலாம்.

1991 ஆம் ஆண்டில் வலம்புரி, எலரா, மணிமேகலை, வடதாரகை ஆகிய படகுகளையும் - கடற்படை கைப்பற்றி, தமது போக்குவரத்திற்குப் பயன்படுத்தியது. இவற்றில் அதிவேக வலம்புரிப்படகினை, திருகோணமலை- யாழ்ப்பாண படைப் போக்குவரத்துக்குக் கடற்படை தொடர்ச்சியாக பயன்படுத்திவந்துள்ளது. படைப்போக்குவரத்தில் இருந்த வலம்புரியும், போக்குவரத்துக்கான எலரா, வடதாரகை - 1998 ஆம் ஆண்டில் யாழ் பருத்தித்துறைக் கடற்பரப்பில் போரில் தாக்கப்பட்டு, மூழ்கிப்போனது. இதைவிட, கடற்படை கைப்பற்றி, தனது பயன்பாட்டில் வைத்திருந்த நெடுந்தீவு மக்களுக்கு - மணிமேகலை படகிற்கு என்ன நடந்தது, அது இப்போது எங்கு உள்ளது என்பதே தெரியாதுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எஞ்சிய குமுதினியும், ஆட்டம் கண்டு பழுதடைந்துவிட்டது. நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து அவலத்திற்கு யார் காரணம் என்பதை இப்போது புரிந்துகொள்ளமுடியும்.

திருகோணமலையில், சிங்களக் குடியேற்றத் திற்கெனப் புதிய பயணிகள் படகுகளைக் கட்டிவிடுகின்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணத்திற்கு நிதி ஒதுக்க மறுப்பது, அதன் இனவாத சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.

1933 ஆம் ஆண்டில் மேதர் என்ற இயந்திரப் படகு போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது. நெடுந்தீவிற்கும், ஊர்காவற்றுறைக்கும் தொடர்ந்து பிரிட்டிஷ் - இலங்கை அரசுக்கு 40 பேர் பயணிக்கக்கூடிய சில்வர்ஸ்பிறே இயந்திரப் படகைச் சேவையில்விட்டது. இதன் பின், உள்ளூர்வாசிகளால் 10 பேர் முதலிட்டு, ஒரு பயணிகள்படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதேவேளை, தனியாரால் சீகுயின், எம்.எம்.எல் ஆகிய படகுகளும் போக்குவரத்தில் ஈடுபட்டன. 1950 ஆம் ஆண்டுகளில், இராஜேஸ்வரி என்ற தனியார் படகு போக்குவரத்தில் ஈடுபட்டது. இவற்றின் பின்பே குமுதினி, எலரா, வடதாரகை, மணிமேகலை, அலையரசி, வலம்புரி என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

கடற்படையின் அபகரிப்பால், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் படகுகள் அழிக்கப்பட்டு, இப்பொழுது ஒரேயொரு பொருளேற்றும் படகான கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திர தேவா படகு மட்டுமே எஞ்சியுள்ளது. மக்கள் பிரச்சினைகளில் அக்கறை இன்றி செயற்படும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும், புதிய படகைக்கட்ட நிதி வழங்க மறுக்கிறது. அரசின் இனவாத போக்காலும், கடற்படையின் அபகரிப்பாலும், நெடுந்தீவு மக்கள் போக்குவரத்தில் அவலப்படுகின்றனர்.

**தவபாலன்**



---

## மண்ணும் மக்களும்

# எழுவைதீவில் பணிசெய்யும் ஆசிரியர்களும் இளைஞர்கள் விளைவிக்கும் தொல்லைகளும்

அதிக கஷ்டப்பட்ட பிரதேசங்களான - அடிப்படை வசதிகளற்ற தீவுப்பிரதேச மாணவர்களின் அறிவினை மேம்படுத்தவும், அவர்களிடையே காணப்படும் திறன்களை வளர்க்கவும், சமூக மனப்பாங்கைக் கட்டியெழுப்பவும் - அயராது உழைக்கின்ற ஆசிரிய சமூகத்திற்கு, இந்தப் பிரதேச இளைஞர்களில் சிலர் இடையூறு ஏற்படுத்திவருவது வேதனைக்குரியவிடயமாகும்.

கடல்கடந்த தீவுகளான - எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு பகுதிகளிலே, ஆசிரியர்களுக்கு இடையூறாக, ஒரு சில இளைஞர்கள் அண்மைக்காலமாக இயங்கிவருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் கடமையாற்றி வருகின்ற வெளியிடத்து ஆசிரியர்கள் - திங்கட்கிழமை காலையில் பாடசாலைக்குச் சென்று, தங்கியிருந்து, சேவையாற்றி, பின்னர் வெள்ளிக்கிழமை மாலைவேளை, மீண்டும் தத்தம் இடங்களுக்குத் திரும்புவது வழக்கம்.

இவர்கள் பாடசாலைக் கட்டடத்தில் அல்லது நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்து கடமையாற்றும்போது, சொல்லொணாத துன்ப, துயரங்களை அனுபவிக்கிறார்கள்.

அத்துடன், தமக்குத் தேவையான உணவைத் தாமே சமைத்து உண்கிறார்கள்.

இவ்வாறு பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து, சேவையாற்றிவரும் ஆசிரிய சமூகத்திற்கு - இங்குள்ள இளைஞர்களின் நடவடிக்கை மேலும் துன்பத்தை உண்டாக்குகின்றன.

எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில்- அதிபர், ஆசிரியைகள் உறங்கிக் கொண்டிருந்தவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 11.15 மணியளவில், கல்வீச்சிற்கு இலக்காகியுள்ளார்கள்.

திரைப்படம் பார்த்துவிட்டு வந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு அல்லது மூன்று நபர்களாளே - பாடசாலை மண்டபத்திற்குக் கற்களை வீசியுள்ளனர் என நம்பப்படுகிறது. அந்த வேளையில், அங்கு பாடசாலை அதிபர், இரு ஆசிரியர்கள், அயல பாடசாலை ஆசிரியர் ஒருவர் மற்றும் யுனிசெப் நிறுவனத்தின் பிள்ளைநேயப் பாடசாலை நிகழ்சித் திட்டத்தின்கீழ் இந்தப் பாடசாலையில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு வேலைகளைச் செய்யவென, நயினாதீவிலிருந்து வந்து தங்கியிருந்து வேலை செய்கின்ற ஐவருமாக - மொத்தம் 9 பேர் உறக்கத்திலிருந்த நேரத்தில், கற்கள் வீசப்பட்டுள்ளன. ஆனால், தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

ஓிருவரின் இந்தச் செயற்பாட்டால், எழுவைதீவு மக்களுக்கு மட்டுமன்றி, ஒட்டு மொத்த தீவகம்வாழ் மக்களுக்கும் அவமானம் என்பது மறைக்கவோ, மறுக்கவோமுடியாத உண்மையாகும்.

அத்துடன், இப்பாடசாலை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பகிஷ்கரிப்பு, வீதிமறிப்பு நடவடிக்கைகள்- இவர்கள் அதிபர், ஆசிரியர்கள் மீது வைத்துள்ள குருபக்தியைப் பறைசாற்றுகின்றது.

அத்துடன், இந்த மாணவர்களுக்குப் பக்கபலமாக நிற்கும் பெற்றோர், பழைய மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இங்கு கடமையாற்றும் அதிபர்- கடந்த 15 வருட காலமாக அதாவது, முதல் நியமனத்திலிருந்து, இன்றுவரை கடமையாற்றுவதுடன், பாடசாலையின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்குமாகத் தன்னையே அர்ப்பணித்த ஒருவர்.

மேலும், இங்குள்ள மக்களின் நன்மை, தீமைகளில் ஊரவர்கள்போல, முன்னின்று செயற்படும் இவருக்கு, நடந்த சம்பவம் வேதனைக்குரியது.

அத்துடன், இந்த வருடம் நியமனம் பெற்று வந்த ஆசிரியர்கள் - தொடர்ந்து பயப்பீதி இல்லாமல் இங்கு கடமையாற்றுவார்கள் என்றால் - அது கேள்விக்குறியே. இவற்றுக்கெல்லாம் இங்குள்ள மக்கள் குற்றாவாளிளை இனங்காண்பதன் மூலமே விடை காணமுடியும்.

கடந்த மாதம் நயினாதீவில் - ஆசிரியர் ஒருவரை தாக்குவதற்குக் கோஷ்டி சேர்த்துச்சென்ற, அப்பாடசாலை மாணவனையும், கோஷ்டியினரையும் சட்டத்திற்குமுன் நிறுத்திய பாடசாலை பெற்றார் ஆசிரியர்சங்கம், பழைய மாணவர்கள் மற்றும் கிராமசேவகரை முன்னுதாரணமாகக்கொண்டு, இங்குள்ள அனைவரும் ஒன்றுதிரண்டு, குற்றவாளிகளை இனங்கண்டு, சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும்.

இல்லையேல், மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்கமுடியாமல்போகும். இதனால், மாணவர்களின் கல்விநிலை வீழ்ச்சியடைந்து செல்லும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

அத்துடன், இதற்கு நிரந்தரமான ஒரு முடிவு எட்டப்படவில்லையானால், வருங்காலத்தில் அதிபர், ஆசிரியர்கள் இங்கு கடமையாற்றுவதற்கு முன்வரமாட்டார்கள் என்பதுவும் மறுக்க முடியாத உண்மையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே, இங்குள்ள மக்கள் துரிதமாகச் செயற்பட்டு, குற்றவாளிகளுக்குத் தண்டனைகளை வழங்குவதுடன், மாணவர்களின் கல்விக்கான இடையூறுகளை அகற்ற முன்வரவேண்டும். கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், எதிர்காலத்தில் கடமையாற்றவுள்ள ஆசிரியர்கள் மனதில் - எழுவைதீவைப் பாதுகாப்பான சூழலாக மாற்றவேண்டும்.

இல்லையேல், எழுவைதீவு கல்வியறிவில் இருண்ட தீவாக மாறிவிடும். இதற்கு இந்த மக்கள் ஆவன செய்வார்களா?

**கிருபா**

# ஈராக்குக்கு கூடுதலான படைகளை அனுப்ப வேண்டுமெனக் கோரிக்கை

## அமெரிக்க செனட் சபை விடுத்தது

(வொஷிங்ரன்)

கூடுதலான படையினரை ஈராக்கிற்கு அனுப்ப வேண்டும் என அமெரிக்க செனட் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு ஏற்பட்டுவரும் பாரிய இழப்புகளை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க சினூக் ஹெலிகொப்ரர் சுட்டுவீழ்த்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும்போது, நீண்டநாள் போரில் இது போன்ற பல ஆபத்துக்களைச் சந்திக்கவேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, பலூஜா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றுமோர் தாக்குதல் சம்பவத்தில், மூன்று அமெரிக்கர்கள் உயிரிழந்துள்ளனர்.

வீதியோரத்தில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல் ஒன்றிலேயே இவர்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் இருவர் அமெரிக்க கட்டட ஒப்பந்தகாரர்கள் என்றும் மற்றையவர் படைச் சிப்பாய் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, தாம் தவறுதலாக ஈராக் மீதான போருக்கு வழிநடத்திச் செல்லப்பட்டுள்ளதாக முன்னாள் நேட்டோ கட்டளை அதிகாரி தெரிவித்தார்.

மேலும், ஈராக்கில் நிலைமை சீரடைந்து வருவதாக தனது மக்களுக்கு அறிவிக்க அமெரிக்கா முற்படுவதாக வொஷிங்ரனில் உள்ள பி.பி.சி செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் ஹெலி தரையிறக்கப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட ஒலிநாடாவை படையினர் பறிமுதல் செய்ததாகவும் அறிவிக்கப்பட்டது.



ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க ஹெலி தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தில் காயமடைந்த படையினர் சிகிச்சைக்காக ஜேர்மனிக்குக் கொண்டுசெல்லப்படுவதை படத்தில் காணலாம்.

# இஸ்ரேலியர் மீதான தாக்குதலை நிறுத்துவதற்கு ஹமாஸ் தீர்மானம்!

(காஸா)

இஸ்ரேல் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதற்கு, தாம் ஆலோசித்து வருவதாகவும் -

ஆனால், ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தமொன்றிற்கு முன்வரப் போவதில்லையெனவும் ஹமாஸ் இயக்கத் தலைவர் அப்துல் அகிஷ் ரன்ரிசீ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புத் தொடரும்வரை போர்நிறுத்தமொன்றிற்கு நாம் உடன்படப் போவதில்லை.

பலஸ்தீனியர்களின் உரிமைகளுக்காக அமெரிக்கா எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்காது எனக் குறிப்பிட்டார்.



கடந்த ஜூன் மாதம் இஸ்ரேலிய படையினர் ஹெலிக்கொப்ரர் மூலம் தாக்குதல் நடத்தி கொலைசெய்ய முயற்சித்ததன் பின்னர் அப்துல் அகிஷ் ரன்ரிசீ மறைவிடம் ஒன்றிலேயே வாழ்ந்து வருகிறார்.

# யூதக் குடியிருப்புக்களுக்கு பன்றிகள் மூலம் பாதுகாப்பு!

## திட்டமிடுகிறது இஸ்ரேலிய அமைப்பு

(ஜெருசலேம்)

யூதர்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதிகள் - இஸ்ரேலியப் படையினரால், பயிற்சியளிக்கப்பட்ட நாய்களின் உதவியுடன் பாதுகாக்கப்பட்டுவருகின்றன.

இந்தத் திட்டத்திற்காக கிபுறா பட்டாலியோன் என்னும் அமைப்பு, பன்றிகளை எல்லைக் காவலில் ஈடுபடுத்தும் நோக்குடன் பன்றிகளுக்குப் பயிற்சி அழிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

பன்றிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள குடி-பென்- யாகோவ் என்பவர், காவல் கடமைக்குப். பன்றிகளைத் தெரிந்தெடுத்தமைக்கான காரணங்களைத் தெரிவிக்கையில்,

நாய்களை விட பன்றிகள் அதிக மோப்ப சக்தி கொண்டவை. ஆயுதங்களை அடையாளம் காணும் சக்தியும் அவைகளுக்கு உண்டு. ஆயுதங்கள் வைத்திருப்பவர்களை கொல்லும் திறனையும் அவை கொண்டுள்ளன.

பன்றியைத் தொடுபவர்கள் மோட்சத்திற்குப் போவதற்கு தகுதி அற்றவர்கள் என்ற கருததும் முஸ்லிம் மதத்தில் காணப்படுவதால் பன்றிகளுக்கு பயிற்சியளிக்க தாம் முடிவு செய்ததாக குரி-பென்-யாகோவ் குறிப்பிட்டார்.

ஆனால், யூதர்களின் சட்டத்தின் பிரகாரம் பன்றி சுத்தம் இல்லாத மிருகம் எனவும், இதனால் மதத் தலைவர் ராமிசிடம் இருந்து அங்கீகாரத்தைப் பெறுவதில் சிரமங்கள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## உலக நோக்கு

# இஸ்ரேலிய பிரதமர் ஷரோன் ரஷ்யாவிற்கு விஜயம் செய்தார்



இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன ரஷ்யாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஈரானின் அணுஆயுதத் திட்டங்கள், ஐக்கிய நாடுகளில் முன்வைக்கப்படவுள்ள மத்திய கிழக்கின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆகியன தொடர்பாக ரஷ்ய அதிபர் புட்டினுடன் கலந்துரையாடுவதற்காகவே அவர் சென்றுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் முன்வைக்கப்படவுள்ள மத்திய கிழக்கின் சமாதானத் திட்டத்தை கைவிடுமாறு ஷரோன கேட்கவுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது.

இத்திட்டம் வெற்றிபெற்றால் சமாதானப் பேச்சுவார்த்தையின் நிபந்தனைகளை செயற்படுத்த நிர்ப்பந்திக்கப்படலாம் எனவும் அதேநேரத்தில் பலஸ்தீனியர்களிடம் அந்த நிபந்தனைகளை அழுத்தம் கொடுக்காமல் போய்விடலாம் எனவும் இஸ்ரேல் பிரதமர் ஷரோன் தெரிவித்தார்.

2001 ஆம் ஆண்டில் ஷரோன் பதவிக்கு வந்தபின் - மூன்றாவது முறையாக ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகில் வயது கூடிய பெண் வெள்ளியன்று ஜப்பானில் மரணம்!



உலகில் மிகவும் வயது அதிகமானவர் எனக் கருதப்படும் ஜப்பானியப் பெண்ணான கமோரோ கொங்கோ தனது 116 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

இரண்டு நாட்கள் தொடர்ந்து நித்திரை செய்துவிட்டு தொடர்ந்து இரண்டு நாட்கள் விழித்திருப்பது இவரது பொதுவான ஒரு நடைமுறையென இவரது பேரப்பிள்ளை கறூச்சி பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

கறூச்சி மேலும் தெரிவிக்கையில்-

நித்திரையில் இருக்கும்போதே, இவருக்கு உணவு ஊட்டுவதாகவும் ஜப்பானில் நடைபெற்ற போருக்கு பின் இவர் அமைதியான வாழ்வை மேற்கொண்டிருந்ததாகத் தெரிவித்தார்.

உலகில் நீண்டகாலம் வாழும் மக்களில் ஜப்பானியர்கள் முதலிடத்தில் உள்ளதாகவும் - மீன் உணவும், மரக்களிகளுமே நீண்டகால வாழ்விற்கு காரணமெனவும் அறியப்பட்டுள்ளது.

நீண்டகாலம் வாழ்வது ஓய்வூதியத் திட்டத்தில் பிரச்சினைகளை உருவாக்குவதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்தியாவின் சிறிநகரில், கார் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டுவெடித்ததில், சிதைந்துபோன காரின் பாகங்களை பொலிஸார் பார்வையிடுகின்றனர்.

# ஒரே நேரத்தில் இரு பெண்களை மணம் முடிக்கவுள்ள மணமகன்!

## வட இந்தியாவின் லக்னோ நகரில் நடக்கவிருக்கிறது

(புதுடெல்கி)

வட இந்திய நகரான லக்னோவைச் சேர்ந்த 27 வயதுடைய சுமாநாத் வர்மா இரு பெண்களை ஒரே நேரத்தில் திருமணம் செய்யவுள்ளார்.

இருதார திருமணம் இந்துக்களிடையே சட்டரீதியாக அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால் சுமாநாத் வர்மாவின் மாமனார் சோகன்லால் - தனது 18 வயது மகள் ராகினியைத் திருணம் செய்வதாக இருந்தால், மூத்த மகள் பிரிதியையும் திருமணம் செய்ய வேண்டும் என வற்புறுத்தியுள்ளார்.

பிரிதி வலதுகுறைந்த ஒரு பெண். இதனால் தனது மரணத்தின் பின்னர் பாதுகாப்பு அற்றவர் ஆகிவிடக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு நிபந்தனை விதித்ததாகவும் சோகன்லால் தெரிவித்தார்.

இறுதியில் புரோகிதர், வளைசாஸதிரி ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்னர் இந்தத் திருமணத்தை நவம்பர் மாதம் 25 ஆம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்துக்களின் திருமணச் சட்டத்தில் இரு பெண்களைத் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படாவிட்டாலும் ஒரேநேரத்தில் இரு திருமணங்கள் நடைபெறுவதால், இது சட்டத்திற்குப் பொருந்தாதெனவும், ஒருவர் முறைப்பாடு செய்யாவிட்டால் எதுவும் நிகழாதெனவும் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

# ஐ.நா. தூதுவர் பர்மா செல்கிறார்!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை தொடர்பான தூதுவர் போலோ பின்கெய்றோ புதிய விசாரணையொன்றை நடத்துவதற்காக பர்மாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சென்றமுறை அரசியல் கைதிகளை விசாரணை செய்த நேரத்தில் ஒற்றுக்கேட்கும் சாதனங்கள் பொருத்தப்படிருந்ததை தெரிந்தபின் தனது விசாரணையை இவர் நிறுத்தியிருந்தார்.

தனது விஜயத்தின்போது எதிர்க்கட்சித்தலைவி சாங்சான் சூகியையும் அவர் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

ஆனால், எதிர்கட்சித் தலைவியைச் சந்திப்பதற்கு பர்மா அரசாங்கம் அனுமதிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது விஜயத்தின்போது அமைச்சர்களையும் பிரதம மந்திரிகின் நியுன்ற்ரையும் சந்திப்பதற்கு அவர் திட்டமிட்டுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

புலிகள் முன்வைத்திருப்பது பரந்தளவான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைபு. நாட்டைப் பிரிப்பதற்கான முன்னோடித் திட்டத்தின் ஒரு அங்கம் எனவும், இதனை அரசு எந்தவகையிலும் அங்கீகரிக்க முனைவது தேசத்துரோக நடவடிக்கையாகும் எனவும், சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள் புலம்பத் தொடங்கியுள்ளன.

இந்த அளவுக்கு நேர்த்தியாகவும், சட்ட நுணுக்கத்துடனும் எவராலும் நிராகரிக்க முடியாத வகையிலும், சர்வதேச சமூகத்தின் ஆலோசனையுடனும் ஒரு மாற்றுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் முன்வைப்பார்கள் என எவருமே கற்பனை பண்ணியிருக்கவில்லை.

சமாதானம் தொடரவேண்டும் இந்த திட்டவரைபினை அரசாங்கம் கவனத்தில் எடுத்தேயாகவேண்டும்.

இதில் அரசு அக்கறை காட்டுமேயானால், எதிர்க்கட்சிகளில் உள்ள இனவாதிகள் மௌனமாக இருக்கமாட்டார்கள்.

இது அவர்களின் வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரியான விடயமே..!

அப்படியானால் அரசு என்ன செய்யப்போகிறது?

வரைபு குறித்த தமது கருத்துக்களை விளக்க சந்திப்பொன்றினை மேற்கொள்ளக்கூடும்...

பேசக்கூடும்...

மீளவும் சந்திக்கக்கூடும்...! பேசும்...!

பின்னரும் சந்திக்கும்...பேசும்...பேச்சே தொடரவும் கூடும்

இது அரசின் காலம் கடத்தும் யுலோபாயம் என்பது தெரிந்தவிடயமே!

அப்படியானால் சமாதானத்தின் முடிவு? என்றார் ஆறுமுகத்தார்.

அது அரசினதும் ஜனாதிபதியினதும் மதபீடங்களினதும் முடிவில்தான் தங்கியுள்ளது என்றார் கனகண்ணா.

ஒரே துருவங்கள் ஒன்றையொன்று எதிர்க்கும் என்பது காந்தவியல் தத்துவம் மட்டுமல்ல... இப்போதைய அரசியல் தத்துவமும் அதுதான். சந்திரிகாவும், ரணிலும் இனவிவகாரத்தில் தீர்வுகாண ஒன்றினையமாட்டார்கள் என்பது சர்வநிச்சயம்...என்று முடித்தார் விஞ்ஞான வாத்தியார்

சமாதானம் இடைக்கால நிர்வாக யோசனைகளுடன் இடைநடுவில் நின்றுவிடுமா? அடுத்துவரும் வாரங்களில் தெரியும் என்றார்... மீண்டும் ஆறுமுகத்தார்...

தெருவாசி

### சிங்கள - தமிழ் கலைக்கூடல் தாக்குதல்;

## 6 ஊடகவியலாளர் உட்பட 10 பேரை கைதுசெய்ய பொலிஸார் தேடுதல்!

சிங்கள - தமிழ் கலைக்கூடலில் சிஹல உறுமய குண்டர்கள் நடத்திய தாக்குதலுடன், தொடர்புடையவர்களாகச் சந்தேகிக்கப்படும் 10 பேரை பொலிஸார் தேடிவருகின்றனர். இவ்வாறு தேடப்படுவோரில் 6 பேர் ஊடகவியலாளர்கள் எனத் தெரியவருகிறது.

கொழும்பு பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவின் பொலிஸ் இயக்குநரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சரத் லுகேடா இது குறித்து மேலும் தகவல் தருகையில், கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடத்தப்பட்ட சிங்கள - தமிழ் கலைக்கூடல் நிகழ்வில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஆறு ஊடகவியலாளர்கள் உட்பட 10 பேரை கைதுசெய்வதற்காக தேடி வருகிறோம்.

விசாரணைகளிலிருந்து, இந்தத் தாக்குதலுடன் இவர்கள் தொடர்புபட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. இவர்களைக் கைதுசெய்ய வீடுகளில் தேடுதல் நடத்தப்பட்டபோதும், அவர்களைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் - குற்றப் புலனாய்வுத் துறையுடன், கொழும்பு பிராந்திய குற்றவியல் பிரிவும் இணைந்து செயற்பட்டுவருகிறது எனத் தெரிவித்தார். மேற்படி தாக்குதல் சம்பவத்தில் ஊடகவியலாளர் உட்பட பலர்காய முற்றமை குறிப்பிடத்தக்கது.

## சமஷ்டி பற்றிய விளக்க அறிவு 60 வீதத்தினருக்கு இல்லை!

### கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

வடபகுதியில் வாழும் மக்களில் அறுபது சதவீதமானோர் சமஷ்டி பற்றி விளக்கமில்லாமல் இருக்கின்றனர்.

அண்மையில், இலங்கையின் மாற்றுக்கொள்கை நிலையத்தால் நடத்தப்பட்ட ஆய்வில் இந்த முடிவு தெரியவந்துள்ளது.

அந்த ஆய்வின் பிரகாரம், வடபகுதியில் வாழ்பவர்களில், 65 சதவீதமான மக்கள் சமஷ்டி ஆட்சி முறையை ஆதரிக்கின்றனர். அதேவேளை 17 விகிதமான மக்கள் சமஷ்டி ஆட்சிமுறையை எதிர்ப்பதோடு, மாற்றீடான தீர்வையே விரும்புகின்றனர் எனவும், அந்தக் கருத்துக்கணிப்பில் இருந்து மேலும் தெரியவந்துள்ளது. (ப)

### ஆயிரத்து 500...

முரண்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் - ஓய்வூதியர்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் அபிவிருத்தியை நோக்கிய மூன்று திட்டங்கள் பிரதானமாக முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### அமைச்சர்களை...

ஊடகங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்துவதையும் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதையும் நாம் கண்டிப்பதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டெங்கு பரவுவதை...

இதனையடுத்து, யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில், டெங்குத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, எமது சபையின் பொதுச் சுகாதார அதிகாரி பி.ஆறுமுகதாஸ் தலைமையில், எட்டுப்பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் யாழ்.மாநகரசபையின எல்லைக்குட்பட்ட பகுதியில், டெங்கு காய்ச்சல் பரவக்கூடிய வகையிலான செயற்பாடுகளைத் தடைசெய்வர்.

அதேநேரம், பொதுமக்களும் நுளம்புகள் பெருகக்கூடிய வகையில், நீர் தேங்கக்கூடியவாறுள்ள பொருட்களை - புதைத்தோ அல்லது எரித்தோ உதவுதல் வேண்டும்.

டெங்குக் காய்ச்சல் ஓர் உயிர் நோய் என்பதால், மக்கள் மிகுந்த பாதுகாப்புடன் நுளம்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால திட்டவரைபு அரசியல் அமைப்பின் 13 ஆவது சரத்துக்கு அமைவானது

### அமைச்சர் பட்டி வீரக்கோன்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் குறித்த திட்டயோசனை, அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக உள்ளதென லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு இணைந்த இடைக்கால நிர்வாக அலகு யோசனை பற்றி கருத்துத் தொவிக்கையிலேயே, இதனை அவர் தெரிவித்தார்.

மேலும், 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் பொதுஜன ஐக்கிய முனனணி அரசினால் முன்வைக்கப்பட்ட திட்டம் மாதிரியே விடுதலைப் புலிகளின் திட்டமும் அமைந்துள்ளது என்றும் வீரக்கோன் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணைகளை ஆரம்பமாகக் கருதுவதாகவும், இது தொடர்பான பேச்சுக்கள் நடத்த முடியுமென்று, இடதுசாரிக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு. கருணாரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வரைபு பற்றி சிரேஷ்ட கட்சித் தலைவர்கள், அரசியல் யாப்பு நிபுணர்கள், சட்ட ஆலோசகர்கள் ஆகியவர்களோடு ஜனாதிபதி பரிசீலித்து, கருத்துப் பரிமாற்றம் செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, சுதந்திரக் கட்சி புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் பற்றி இன்று அறிக்கையொன்றை வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கண்ணிவெடியில் இரு படையினர் காயம்

காங்கேசன்துறையில் நேற்று கண்ணிவெடியில் சிக்கி, இரண்டு படையினர் காயமடைந்துள்ளனர்.

காலை உணவுக்காகச் சென்றுகொண்டிருந்த படையினரே கண்ணிவெடியில் சிக்கியதாக, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார். காயமுற்ற படையினர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## திரைப்பட வழங்குனர் கூட்டுறவுச் சங்கத்தின் வீடியோ நிலையங்களுக்கான அறிவுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள திரைப்படங்களை விநியோகிக்கும் விநியோகஸ்தர்களுக்கு - திரைப்பட வழங்குனர் கூட்டுறவுச் சங்கம் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

அந்த அறிவுறுத்தல்களின் விபரம் வருமாறு-

புதிய திரைப்படங்களை விநியோகிக்கும் விநியோகஸ்தர்கள், புதிய திரைப்படம் கிடைக்கும் முன்னர் பத்திரிகை விளம்பரங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, புதிய படங்கள் கிடைக்கப்பெற்றதும், அதனை சங்கத்தில் ஒப்படைத்து, வெளியிடுவதற்குத் தகுந்ததா என சங்கம் சிபாரிசு செய்ததன் பின்னர் மறுநாளே பத்திரிகைகளில் விளம்பரங்களைச் செய்ய வேண்டும். இது விநியோகஸ்தர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ள ஏதுவானதாக அமையும்.

புதிய திரைப்படங்களைக் கொள்வனவு செய்யும் வீடியோ நிலைய உரிமையாளர்கள் கொள்முதல் செய்யும் ஒவ்வொரு சி.டி. கசற்றுகளுக்குமுரிய பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதுடன, இந்தப் பற்றுச்சிட்டைகளில் சங்க முத்திரை உள்ளதா எனவும் கட்டாயமாகச் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். சங்கமுத்திரை இல்லாத பற்றுச்சிட்டை வைத்திருப்பவர்களின் சி.டி. கசற்றுக்கள் சங்கத்தால் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு திரைப்பட வழங்குனர் கூட்டுறவுச் சங்கத்தினர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த திட்ட வரைபு தமிழ் மக்களையே மையமாகக் கொண்டது!

### அமைச்சர் ஹக்கீம் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, இடைக்கால நிர்வாகம் குறித்த திட்டயோசனை, தமிழ் மக்களை இலக்காகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. இதனை விமர்சிக்க வேண்டிய தேவையில்லை இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் அரசின் அழைப்பை ஏற்று, அந்த நாட்டுக்குச் சென்று சமஷ்டி முறை குறித்து ஆராய்ந்துவிட்டு, நேற்று நாடு திரும்பிய அமைச்சர் - விமான நிலையத்தில், ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது, இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்காக, மாற்று யோசனை ஒன்றைத் தயாரித்து, விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களோடு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி மற்றும் யோசனைத் திட்டமொன்றைத் தயாரித்து, அரசாங்கத்துக்கும், நோர்வே பிரதிநிதிகள் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் சமர்ப்பிக்கப்போவதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

### டெங்குக் காய்ச்சல்...

கரப் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே பாதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவப் பரிசோதனைகளின் பிரகாரம் கண்டறியப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக டெங்குக் காய்ச்சல் யாழ்.மாவட்டத்தில் பரவி வருவதால், பொதுமக்கள் விழிப்பாக நடந்துகொள்ள வேண்டுமென, யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டார். (ப)

### நிமோனியா...

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் இராசையா (வயது-61) என்பவரே, நேற்று அதிகாலை சிகிச்சை பலனளிக்காமையால் உயிரிழந்துள்ளார்.

### புலிகளின்...

அரச கட்டமைப்புக்கும் வழிகோலும் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு, இரு தரப்பும் இணங்குவார்கள் என நம்புகிறோம்.

விடுதலைப் புலிகளின் திட்ட யோசனைகளை நாம் கவனத்தில் எடுத்துள்ளோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சியில், நோர்வே அரசு ஆற்றிவரும் பங்களிப்பையும் அமெரிக்கத் தூதரகம் கௌரவித்துள்ளது.

## தமிழக அகதிமுகாமில் உள்ள மகனை மீட்டுத் தாருங்கள்!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாயார் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தின் சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தனது மகனை மீட்டுத்தருமாறு கோரி, தாயாா யாழ்.மனித உரிமைகள் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கண்டி வீதி - அரியாலையைச் சேர்ந்த நாகமணி நாகலிங்கம் என்பவரே, தனது மகனான நாகலிங்கம் வசந்தகுமார் (வயது 38) என்பவரை மீட்டுத்தருமாறு கோரி, இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்ற தனது மகன், தமிழ்நாட்டில் தங்கியிருந்த சமயம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, வேலூர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

எனினும், கடந்த 1999ஆம் ஆண்டு இவர் குற்றவாளி இல்லையெனத் தெரிவித்து திருச்சி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட போதும், அவர் தொடர்ந்தும் சிறப்பு முகாமொன்றில் பொலிஸ் காவலுடனேயே வைக்கப்பட்டுள்ளார்.

குற்றவாளி இல்லையென நீதிமன்றம் விடுதலை செய்தபின்னும், இவ்வாறு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருப்பதையும், இலங்கை வருவதற்கு அவருக்கு அனுமதி வழங்கப்படாததையும் எதிர்த்தே, இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய நடவடிககையை எடுக்கவிருப்பதாக, யாழ். மனித உரிமைகள் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ப)

M.A; M.Com.
(காமராஜர் பல்கலைக்கழகம்)

- மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- பட்டதாரிகள் மட்டுமே இப்பட்டப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் 01.11.2003 இல் இருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம் 06.12.2003

விவரங்களுக்கு

யாழ்.இணைப்பாளர்
(காமராஜர் பல்கலைக்கழகம்)
புதிய உயர் கல்லூரி)
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(சி-1765)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.